
# கிழவியின் தந்திரம்

www.t.me/tamilbooksworl

AVOID TO DOWNLOAD FROM userupload.net SPAM SITE



www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

கி.வா.ஜகந்நாதன்

www.t.me/tamilbooksworld

# கிழவியின் தந்திரம்

www.t.me/tamilbooksworld

கி. வா. ஜகந்நாதன்

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
8, V. C. கார்டன், 2வது தெரு,
(முதல் மாடி)
மந்தைவெளி, சென்னை-600 028

முதல் பதிப்பு : ஜூலை, 1988
இரண்டாம் பதிப்பு : ஆகஸ்ட், 1996
மூன்றாம் பதிப்பு : டிசம்பர், 1997
நான்காம் பதிப்பு : பிப்ரவரி, 2000

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

**விலை : ரூ. 15-00**

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஜெய் கணேஷ் பிரிண்டிங் ஒர்க்ஸ்
8/2, மத்தள நாராயணன் தெரு,
மயிலாப்பூர், சென்னை — 600 004.

www.t.me/tamilbooksworld

# முன்னுரை

இந்தப் புத்தகத்தில் குழந்தைகள் படித்து மகிழ்வதற்கு உரிய பதினைந்து கதைகள் அடங்கியிருக்கின்றன. இந்தக் கதைகள் புலவர்களுடைய ஆற்றலும், அறிவுடைய பெண்களின் சாமார்த்தியமும், மெய் பேசுதல், தாயினிடம் அன்பு வைத்தல், விடா முயற்சி செய்தல், தர்மம் தலைகாத்தல் முதலிய நீதிகளைப் புலப்படுத்துகின்றன. தமிழ்ப் புலவர்களின் அறிவாற்றலை அறிந்து விளங்கும் வகையில் சில கதைகள் உள்ளன.

இவை குழந்தைகள் படித்து இன்புறு வதற்கும், முதியோர் கல்வி கற்கும் போது அவர் படித்து மகிழ்வதற்கும் இவை பயன் படும். இந்தக் கதைகளில் சில பல காலமாகத் தமிழ் நாட்டில் வழங்கி வரும் வரலாறுகளை அடிப்படையாகக் கொண்டவை.

கி. வா. ஜகந்நாதன்

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# பொருளடக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கிழவியின் தந்திரம் | ... | 5 |
| 2. | நம்பினோர் கெடுவதில்லை | ... | 11 |
| 3. | மாற்றிய பாட்டு | ... | 15 |
| 4. | மெய் சொல்வதனால் மதிப்பு உண்டாதல் | ... | 21 |
| 5. | சாமான்ய நிலை | ... | 25 |
| 6. | தர்மம் தலைகாக்கும் | ... | 29 |
| 7. | செருக்கை இழந்த புலவர் | ... | 33 |
| 8. | தாய் அன்பு | ... | 38 |
| 9. | முயற்சி திருவினையாக்கும் | ... | 42 |
| 10. | கடலும் கிணறும் | ... | 45 |
| 11. | பிள்ளையார் தந்த பாக்கியம் | ... | 52 |
| 12. | சும்மா இருக்கிற சாமியார் | ... | 56 |
| 13. | கொடுப்பதில் இன்பம் | ... | 60 |
| 14. | கண்ணன் செய்த தந்திரம் | ... | 64 |
| 15. | பொரி அரிசியின் கதை | ... | 69 |

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 1. கிழவியின் தந்திரம்

சிவகங்கைச் சம்ஸ்தானத்தில் மருது சேர்வைக் காரர் என்ற ஜமீன்தார் ஆட்சி புரிந்து வந்தார். வீரத்திலும் கொடையிலும் புலவர்களைப் போற்றும் திறத்திலும் அவர் சிறந்து விளங்கினார். அதனால் அவரை ஒரு சிற்றரசராக எண்ணாமல் முடியுடை மன்னராகவே எண்ணி அவரைப் பாராட்டினார்கள் மக்கள். அவரை மருது பாண்டியர் என்றே அழைத்தார்கள். வேறு சிலரும் மருது என்ற பெயருடன் அந்தச் சம்ஸ்தானத்தை ஆண்டதுண்டு. அவர்களுக்குள் வேற்றுமை தெரிவிப்பதற்காகக் குடிமக்கள் ஒவ்வொருவரையும் தனித் தனியே அடையாளச் சொல் கூட்டிக் குறிப்பிட்டு வந்தார்கள். பெரிய மருது, சின்ன மருது, வெள்ளை மருது என்று வேறுபாடு தோன்றும்படி பேச்சு வழக்கில் பேசி வந்தார்கள்.

இந்த மருது பாண்டியர்களில் ஒருவராகிய வெள்ளை மருது, புலவர்களிடத்தில் அன்பு பூண்டு என்றும் குன்றாத புகழைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற உண்மையை அவர் அறிந்திருந்தார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

 www.t.me/tamilbooksworld

ஒரு சமயம் அவருடைய கணக்குப் பிள்ளை வரிகளைச் சற்றுக் கடுமையாகத் தண்டி வந்தான். பணம் தேவையாக இருந்ததால் வெள்ளை மருது அவன் அவ்வாறு செய்வதைத் தடுக்காமல் இருந்தார்.

கொடுக்கக் கூடியவர்கள், சண்டித்தனம் செய்கிறவர்கள், நல்லவர், பொல்லாதவர் என்று பாராமல் எல்லோரையும் ஒரு கிட்டிக்குள் அகப் படுத்துவதுபோல், அந்தக் கணக்குப் பிள்ளை செய்து வந்தான். இதனால் சில பெரிய மனிதர் களுடைய உள்ளங்களில் வெறுப்பு உண்டா யிற்று. ஆனால், நாட்டுத் தலைவருடைய ஆணைக்கு மாறு சொல்லலாமா? வெள்ளை மருது சொல்லித்தான் கணக்குப் பிள்ளை அவ்வளவு கண்டிப்பாக இருக்கிறான் என்று எல்லோரும் எண்ணினார்கள்.

'காலம் நன்றாக இருந்தால், மழை சரியாகப் பெய்து விளைச்சலும் உள்ளபடி விளைந்தால், நாங்களே வரியைக் கட்டிவிட மாட்டோமா? பஞ்ச காலம் ஆகையால் கையில் பணம் சேர வில்லை இந்தக் காலத்தில் இப்படிக் கெடுபிடி பண்ணுவதனால் லாபம் ஒன்றும் இல்லை' என்று அவர்கள் தங்களுக்குள்ளே பேசிக் கொண்டார்கள்.

வரி வசூலாகி வருகிறதைக் கண்டு வெள்ளை மருதுக்கு ஆனந்தம் உண்டாயிற்று. எப்படி வசூலாகிறது என்பதை அவன் விசாரிக்கவில்லை.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கணக்குப் பிள்ளை செய்யும் கொடுமைகள் அவன் காதில் எட்டவில்லை.

புலவர் பரம்பரையைச் சேர்ந்த கிழவி ஒருத்தி இருந்தாள். அவளும் சம்ஸ்தானத்துக்கு வரி செலுத்த வேண்டிய பாக்கி இருந்தது. கணக்குப் பிள்ளை அவளிடமும் இரண்டு, மூன்று தடவைகள் வந்து கேட்டான்; பயமுறுத்தினான். அப்பால் ஒரு நாள் வந்து, ''இன்று வரி தராவிட்டால் உன் வீட்டுப் பண்டங்களை எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்வேன்'' என்றான்.

கிழவிக்குக் கோபம் வந்து விட்டது.

''கொடுக்க முடிந்தால் இந்த வரியை முன்பே கொடுத்திருக்க மாட்டேனா? நீர் இப்படியெல்லாம் வந்து மிரட்டுகிறீரே! நானும் இவ்வளவு காலமாகப் பார்த்திருக்கிறேன். இப்படிக் கிட்டி கட்டி வரி தண்டுவதைக் கண்டதே இல்லை'' என்றாள்.

''உன்னுடைய ஒப்பாரியை எல்லாம் இப்போது விவரிக்க வேண்டாம். பணம் கொடுக்கிறாயா இல்லையா?'' என்றான் கணக்குப் பிள்ளை.

''பணம் இருந்தால் தானே கொடுக்க? இவ்வளவு அதிகாரத்தை உனக்குக் கொடுத்தவர் யார்?'' என்று கிழவி கேட்டாள்.

''ஏன்? நம்முடைய வெள்ளை மருது துரையே என்னிடம் வரி வாங்கச் சொன்னார்'' என்றான் கணக்குப் பிள்ளை.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கிழவிக்குக் கோபம் கனலாக மூண்டது. "ஓகோ! வெள்ளை மருதுக்கு மிஞ்சிப்போச்சோ?" என்று கேட்டாள்.

'கிழவியா இப்படிப் பேசுகிறாள்' என்று கணக்குப் பிள்ளைக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. சம்ஸ்தானாதிபதியாக உள்ள வீரரை அவ்வளவு அலட்சியமாகப் பேசும் தைரியம் வேறு யாருக்கும் இல்லை. அப்படிப் பேசி அந்தச் சம்ஸ்தானத்தில் வாழ முடியுமா?

கணக்குப் பிள்ளைக்கு இந்தக் கிழவியை அடக்க நம்முடைய துரை அவர்களை அழைத்து வர வேண்டும் என்று தோன்றி விட்டது. கோபத்தால் உடம்பு பதற ஓடினான். வெள்ளை மருது துரைக்கு முன்னால் போய், கிழவி கூறியதைப் படபடப்புடன் கூறினான்.

வெள்ளை மருது செய்தியை விசாரித்து அறிந்தார். "அந்தப் புலவர் வீட்டுக் கிழவியா? அப்படிச் சொல்ல மாட்டாளே! நீ என்ன சொன்னாயோ?" என்றார்.

கணக்குப் பிள்ளை கிழவியைப் பற்றியே குறை கூறினான். வெள்ளை மருது அவனுடைய தொந்தரவு பொறுக்காமல் கிழவியின் வீட்டுக்குப் புறப்பட்டார்.

கிழவியின் வீட்டிற்கு ஆளுடன் யாவரும் சென்றார்கள். அந்த வீட்டிற்குள் நுழையும் பொழுது கிழவி தன் பேரனைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டிக் கொண்டிருந்தாள். அவள்

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஆத்திரத்தில் பேசி விட்டாலும் அப்பால், 'ஏன் இவ்வாறு பேசினோம்?'' என்ற எண்ணம் உண்டாயிற்று. உள்ளுக்குள் அச்சமும் ஏற்பட்டது. அதற்கு என்ன தண்டனை கிடைத்தாலும் உட்பட வேண்டியதுதான் என்று தீர்மானித்துக் கொண்டாள்.



ஆனாலும் அவள் உள்ளம், ''ஏதாவது தந்திரம் செய்து தப்ப வழி உண்டா?'' என்று யோசித்தது. குழந்தையைத் தாலாட்டியபடியே இந்தச் சிந்தனையில் ஆழ்ந்தாள். அவளுக்கு ஒரு தந்திரம் தோன்றி விட்டது போலும்! சிந்தனை தேங்கிய அவள் முகத்தில் ஒளி லேசாகப்படர்ந்தது அதே சமயத்தில் வெள்ளை மருது இடைவழியில் வந்து கொண்டிருந்தார். கிழவிக்கு யாரோ

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வருகிறார் என்று தெரிந்து விட்டது. உடனே குரல் எடுத்துத் தாலாட்டுப் பாட ஆரம்பித்தாள்.

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆர்இராரோ
கட்டிக் கரும்பேஎன் கண்மணியே கண்வளராய்
குன்றுமே கம்கிளம்பி குன்றாற்றி லேவிழுந்து
வெள்ளம் வருது என்ற தல்லால்
வெள்ளை மருது என்றேனோ
கொஞ்சி விளையாடும் குழந்தைகள் காலிலிட்ட
மிஞ்சிபோச் சென்ற தல்லால்
மிஞ்சிப்போச் சென்றேனோ?

அவள் செய்த தந்திரம் அது. தான் கூறிய வார்த்தைகளின் தொனியையும் பொருளையும் மாற்றி விட்டாள், வெள்ளை மருது என்பதை வெள்ளம் வருது என்று மாற்றி, மிஞ்சிப் போச்சே என்பதை மிஞ்சி போச்சு என்று மாற்றிக் காட்டினாள். வேகமாகப் பேசுகையில் இரண்டு வகைத் தொடர்களுக்கும் தொனியில் வித்தியாசம் தெரியாது.

''நான் என்ன செய்வேன்? வெள்ளம் வந்ததையும், தண்ணீரில் அளைந்த குழந்தையின் மிஞ்சி காணாமற்போனதையும் சேர்த்துச்சொல்லப்போக இப்படி விபரீதமாக விளைந்ததே'' என்று அந்தக் கிழவி விளக்கி யிருந்தாலும் கூட, அது வெள்ளை மருதுக்குச் சமாதானமாகத் தோன்றுயிருக்காது ஆனால் கிழவி பாடிய தாலாட்டுப் பாட்டு அத்தனை வார்த்தைகளையும் சொல்லாமற் சொல்லியது. இதைக் கேட்டு எல்லோரும் திகைத்து விட்டனர்.

வெள்ளை மருது வீட்டிற்குள் நுழையவில்லை. இடைவழியிலேயே தம் பரிவாரத்துடன்

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

திரும்பிச் சென்று விட்டார். அரண்மனைக்குப் போனபிறகும் கூட அவர் காதில் அந்தக் கிழவி பாடிய தாலாட்டுப் பாட்டு ஒலித்துக் கொண்டே இருந்தது.

## 2. நம்பினோர் கெடுவதில்லை

கங்கைக் கரையில் பண்டிதர் ஒருவர் கங்கை யாற்றின் பெருமையைப் பற்றியும் அதில் நீராடு கிறவர்கள் தங்களுடைய பாவங்களைப் போக்கிக் கொள்ளும் சிறப்பும் பற்றியும் சொல்லிக் கொண்டு வந்தார். பலர் அவருடைய புராணத்தைக் கேட்டு மகிழ்ந்தார்கள். அப்பொழுது கைலாசத்தில்இருந்த கைலாசபதியைப் பார்த்துப் பார்வதி தேவி, ''கங்கையில் மூழ்குகிறவர்கள் எல்லோருக்கும் பாவம் ஒழிந்து நல்ல கதி கிடைக்குமென்றால், கைலாசத்தில் அத்தனை பேர்களுக்கும் இடம் காணாதே'' என்றாள்.

''அடி பைத்தியக்காரி, கங்கையில் மூழ்குகிற வர்கள் எல்லோரும் தங்களுடைய பாவங்கள் எல்லாம் போகும் என்று நம்புவது இல்லை. புராணம் படிக்கிறாரே, அவருக்குக்கூட இந்த நம்பிக்கை இல்லை. யார் உண்மையாக நம்புகிறார் களோ, அவர்களுக்கு நிச்சயமாகக் கைலாச பதவி கிடைக்கும்'' என்று இறைவர் கூறினார். உடனே

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பார்வதிதேவி, ''கங்கையில் மூழ்குகிறவர்களில்யார் உண்மையாக நம்பி மூழ்குகிறார்கள் என்றும் யார் நம்பிக்கை இல்லாமல் மூழ்குகிறார்கள் என்றும் எப்படித் தெரிந்துகொள்வது?'' என வினவினாள்.

''நான் உனக்கு அதைக் காண்பிக்கிறேன். வா, போகலாம். நாம் இருவரும் கிழவனும் கிழவி யுமாக மாறி, கங்கைக் கரைக்குப் போகலாம்'' என்று கூறி இருவரும் கிழ வடிவங்களை எடுத்துக்கொண்டு போனார்கள்.

இருவரும் கங்கையில் மூழ்கி நீராடும் பொழுது கைலாசபதியாகிய கிழவர் நீரோடு போய்விட்டார். பார்வதி தேவியாகிய கிழவி, ''என்னுடைய புருஷனை யாரும் காப்பாற்ற மாட்டீர்களா?'' என்று கதறியழுதாள்.

புராணம் படித்த பண்டிதர் அங்கே வந்தார். ''அம்மா நான் உங்கள் கணவரைக் காப்பாற்று கிறேன்'' என்று சொல்லிக் கங்கையில் இறங்கி னார். கிழவி அப்பொழுது, ''ஒரு பாவமும் செய் யாதவராக இருந்தால்தான் அவரைக் காப்பாற்ற முடியும், இல்லாவிட்டால் முடியாது'' என்றாள்.

பண்டிதருக்குத் தம்மேலேயே நம்பிக்கை யில்லை. தாம் செய்த பாவங்கள் எல்லாம் அவரு டைய நினைவுக்கு வந்தன. அதனால் அவர் ஒன்றும் செய்ய முடியாமல் தலை குனிந்து நின்றார். கிழவியின் ஓலக் குரலைக் கேட்டு வேறு சிலரும் அங்கே ஓடி வந்தார்கள். அவர்கள் கிழவரை மீட்கலாம் என்று நினைக்க தொடங்கிய

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பொழுது கிழவி "ஒரு பாவமும் செய்யாதவர் களால்தான் அவரை மீட்க முடியும்'' என்றாள். அதைக் கேட்ட அவர்கள் எல்லோரும் தங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று எண்ணி நின்று விட்டார்கள்.



இந்தச் சமயத்தில் முரட்டு ஆள் ஒருவன் அங்கே வந்தான். கிழவியைப் பார்த்து, "ஏனம்மா அழுகிறாய்? உனக்கு என்ன கஷ்டம் வந்தது?'' என வினவினான். கிழவி எல்லாவற்றையும் சொன்னாள். அதற்கு அந்த முரடன், தான் கிழவரைக் காப்பாற்றுததாகக் கூறினான். அதற்கு வழக்கம்போல் கிழவி, "ஒரு பாவமும் செய்யாமல் இருந்தால்தான் உன்னால் இயலும்'' என்றாள். அது கேட்ட முரடன். "நான்

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



இப்பொழுதுதான் பண்டிதர் படித்த புராணத்தைக் கேட்டேன். இந்தக் கங்கையில் ஒரு தடவை மூழ்கினால், எல்லாப் பாவங்களும் தொலையும் என்று சொன்னார். இதோ நான் ஒரு முழுக்குப் போடுகிறேன். என்னுடைய பாவங்கள் தொலையட்டும்'' என்று சொல்லி முழுக்கும் போட்டான். பிறகு நீந்திச் சென்று அந்தக் கிழவரை இழுத்துக் கொண்டு வந்தான்.

உண்மையான நம்பிக்கையோடு இருந்து வந்த முரடனுக்கு முன்னாலே கைலாசபதியாரும். பார்வதி தேவியும் தங்கள் தரிசனத்தைக் காட்டி. ஆசீர்வாதம் செய்தார்கள்.

கைலாசபதி பார்வதிதேவியைப் பார்த்து, ''பார்த்தாயா, இத்தனை பேர்கள் இருந்தும் இந்த ஒருவனைத் தவிர மற்ற எவருக்கும் நம்பிக்கையில்லாமல் போயிற்று; புராணம் படித்த பண்டிதருக்கே நம்பிக்கையில்லையே. ''நம்பினோர் கெடுவதில்லை'' என்பதை இந்த ஒருவன்தான் நிரூபித்தான். ஆதலால் இவன் ஒருவனுக்குத் தான் கைலாசத்தில் இடம் இருக்கும்'' என்று சொன்னார்; பிறகு அவர்கள் இருவரும் மறைந்து போனார்கள்.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 3. மாற்றிய பாட்டு

வெகு காலத்திற்கு முன் மதுரை என்ற நகரத்தில் பராக்கிரம பாண்டியன் என்பவன் ஆட்சி புரிந்து வந்தான். அவனிடம் அடிக்கடி தமிழ்ப் புலவர்கள் வந்து போய்க் கொண்டிருப்பார்கள். அவனும் அந்தத் தமிழ்ப் புலவர்களிடமும் மிகவும் அன்புகொண்டு உபசாரம் செய்வான். தமிழ் நாட்டுப் புலவர்களில், அவனிடம் சென்று பரிசு பெறாத புலவர்களே இல்லை என்று சொல்லி விடலாம்.

சார்வ பௌமர் என்ற புலவர் அந்த அரசனைப் பார்த்துப் பழகும் வாய்ப்புக் கிடைக்காமல் இருந்தார். அவர் பாண்டியனைக் காண வேண்டும் என்ற ஆவலோடு மதுரையை நோக்கிப் புறப்பட்டார். பல காலமாகப் பார்க்க வேண்டும், பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் அவருடைய உள்ளத்தில் இருந்தமையால் அங்கே போனவுடன் அங்கே என்ன என்ன நடக்கும் என்று பலவாறாகக் கற்பனை செய்து பார்த்தார். பாண்டியன் ஓடி வந்து தம்மை வரவேற்பான் என்றும், தம்முடைய கவிகளைக் கேட்டுப் பாராட்டி, பலவகைப் பரிசுகள் அளிப்பான் என்றும் அவர் கற்பனை பண்ணினார்.

சார்வ பௌமர் மதுரையை அடைந்தார். அப்போது பாண்டிய மன்னன் பிற நாட்டு

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



மன்னவன் ஒருனோடு போர் புரிவதைப் பற்றித் தன்னுடைய மந்திரிகளோடு ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தான்.

புலவர் அரண்மனையை அடைந்ததும் அவரை இன்னார் என்று அறிந்து கொண்டு அதிகாரி ஒருவர் அவரை ஓர் இடத்தில் தங்கச் செய்து, வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தார். மாமன்னனைக் காண வேண்டும் என்ற ஆவலோடு வந்த புலவர், ''மன்னரைப் பார்க்கலாமா?'' என்று கேட்டார்.

''நீராடி உணவு கொண்டு இருங்கள். மன்னரைப் பார்க்கும் சமயம் தெரிந்து சொல்கிறேன். அப்போது போய் காணலாம்'' என்று அதிகாரி சொன்னார்.

www.t.me/tamilbooksworld

புலவர் கட்டியிருந்த மனக் கோட்டை தளர்ச்சியை அடைந்தது. 'புலவர்கள் எல்லாம் பாண்டியனை வானளாவப் புகழ்ந்தார்களே! அப்படியே ஓடி வந்து கட்டிக் கொள்வான் என்று சொன்னார்களே; இங்கு நடப்பது வேறு விதமாக அல்லவோ இருக்கிறது?' என்று அவர் எண்ணினார். 'என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்' என்று அவர் பொறுத்திருந்தார் அன்று முழுவதும் பாண்டிய மன்னரை அவரால் காண முடியவில்லை.

www.t.me/tamilbooksworld

அதிகாரி, ''இதோ பார்க்கலாம். மிகவும் முக்கியமான ஆலோசனையில் மன்னர் ஈடுபட்டிருக்

www.t.me/tamilbooksworld

கிறார். கொஞ்சம் பொறுங்கள்'' என்று சொல்லி வந்தார்.

இப்படியாக இரண்டு நாட்கள் கழிந்தன. புலவருடைய ஆர்வம் தளர்ந்தது; சிறிது கோபம் கூட வந்தது.

உண்மை என்னவென்றால் அதிகாரி பாண்டியனுக்கு அந்தப் புலவர் வந்த செய்தியையே தெரிவிக்கவில்லை. மிகவும் இரகசிய மாக மந்திராலோசனை நடந்தமையால் அரசனைக் காண முடியாது என்று அவர் நினைத்தார். அன்றியும் அதிகாரிக்கு மந்திராலோசனையை விடப் புலவரைப் பார்ப்பது பெரிதாகத் தோன்ற வில்லை.

புலவருக்கு நடந்த உபசாரங்களில்குறைவில்லை. ஆனால், அவர் வெறும் சோற்றுக்காகவா அங்கே வந்தார்? 'இனிமேல் நாம் காத்துக் கொண்டிருப்பது பேதமைச் செயல்; புறப்பட வேண்டியதுதான்' என்று அவர் தீர்மானித்தார்.

அதிகாரியிடம், ''உம்முடைய மன்னனைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்காது என்று தோன்றுகிறது. தமிழ்ப் புலவர்களைத் தெய்வமாகப் போற்றுகிறவர் அவர் என்று சொல்லிக் கொண்டார்கள். ஆனால் இங்கே வந்த பிறகு எனக்கு உண்மை விளங்கி விட்டது. சரி, நான் விடை பெற்றுக் கொள்கிறேன்'' என்றார். அதிகாரி அப்போதுதான் தம் குற்றத்தை உணர்ந்தார். உடனே அந்த அதிகாரி அரசனிடம்



www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

புலவர் வந்திருக்கும் செய்தியைத் தெரிவிக்கச் சென்றார்.



'சார்வ பௌமர் என்ற புலவர் வந்து மூன்று தினங்களாகக் காத்துக் கொண்டிருக்கிறார்' என்ற செய்தி மாமன்னன் காதில் விழுந்தது. தன்னுடைய அவைக்களத்திற்கு அதுகாறும் வராத புலவர் அவர் என்பதை அவன் உணர்வான். ''அவரை வந்த உடனே என்னிடம் அழைத்து வருவதற்கு என்ன?'' என்று கேட்டான்.

''மன்னர்பிரான் மந்திராலோசனையில் ஈடுபட்டிருந்தமையால்...'' என்று அதிகாரி சமாதானம் சொல்ல வந்தார்.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



''ஆலோசனையைச் சிறிது நேரம் கழித்துச் செய்யலாம். ஆனால் புலவரைக் காத்திருக்க வைக்கலாமா?'' என்று கோபத்துடன் அரசன் கேட்டான்

''சரி, இவ்வளவு நாள் காத்திருக்கும்படிச்செய்த குற்றத்திற்கு நானே அவர் உள்ள இடத்திற்குச் சென்று அவரைப் பார்ப்பேன். தமிழுக்கு நான் செய்த அவமானத்திற்கு இப்படிச் செய்வதுதான் பரிகாரம்'' என்று சொல்லிப் புறப்பட்டு விட்டான் பாண்டியன்.

அங்கே புலவர், 'இன்னும் அதிகாரி வந்து சேர வில்லையே!'என்றுகாத்திருந்தார். சார்வபௌமரும் தம்முடைய கோபத்தைப் பாட்டிலே காட்டத் தொடங்கினார்.

''இவன் தமிழ் நூல் அறிவில் அகத்தியன் என்று சொல்வதெல்லாம் அறியாமை, உண்மை யல்ல'' என்று சொல்ல ஆரம்பித்தார்.

அதற்கு முன்பே பாண்டியன் புலவரைக் காணப் புறப்பட்டுவிட்டான். பாட்டு முடிவதற் குள் அரசன் புலவரை நாடி வருகிறான் என்பதை அதிகாரி ஓடி வந்து சொன்னார். புலவருக்கு வியப்பு உண்டாயிற்று. 'இவ்வளவு நாள் காக்க வைத்த அரசன் நேரே வருவதாவது இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது' என்று நினைத்தார். அதற்குள் அதிகாரி தாம் அரசனிடம் புலவர் வரவை இதுவரையில் தெரிவிக்காத குற்றத்தை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஒப்புக்கொண்டு, ''நீங்களே என்னைக் காப்பாற்ற வேண்டும்'' என்று புலவர் காலிலே விழுந்தார்.

புலவருக்கு உண்மை விளங்கி விட்டது. மன்னன் தம்மைப் பார்க்க வருவதை எண்ணிய போது அவர் உடம்பு புளகம் போர்த்தது. அவர் மன்னனை எதிர் கொண்டு வரவேற்கப் புறப் பட்டார்.

பாண்டியனும் புலவரும் சந்தித்தார்கள். ''புலவர் பெருமானே, என் பிழையைப் பொறுக்க வேண்டும்'' என்று அரசன் கூறினான். புலவர் ''நான் முதலில் ஏமாற்றம் அடைந்தேன். ஆனால் உண்மை தெரிந்த பிறகு மாற்றம் அடைந்தேன். என் கவியும் மாற்றம் அடைந்தது'' என்றார்.

''கவி மாற்றம் அடைந்ததா'' என்று ஆவலோடு கேட்டான் அரசன்.

புலவர் தாம் தொடங்கிய பாட்டை முடித்து விட்டார். ஆரம்பித்தபோது இகழ்ச்சியாகப் பாட எண்ணியே ஆரம்பித்தார். பாட்டு முடிவதற்குள் உண்மை தெரிந்த பிறகு அந்தப் பாட்டைப் பாண்டிய மன்னனுக்கு உரிய புகழைச் சொல்வ தாக அடையுமாறு சொல்லி முடித்தார்.

''அகத்தியன் என்று இவனைச் சொல்வது அறியாமை, உண்மையன்று'' என்றல்லவா தொடங்கினார்? இப்போது ''அந்த அகத்தியன் இவன் கால் கழுவிய நீரைக் குடித்தல்லவா தமிழ் கற்றான்? அப்படி இருக்க, இவனை அகத்தியன்

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



என்று சொல்லாமா?'' என்று பொருள் தோன்று மாறு பாட்டை முடித்தார்.

பாண்டியன் பாட்டைக் கேட்டுக் பிரமித்துப் போனான். ''நான் செய்த பிழைக்கு அகத்திய முனிவர் அல்லவா இகழ்ச்சியைப் பெற்றார்?'' என்றான்.

புலவர் உடனே, ''நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லையே! பழங்காலத்தில் இருந்த கடல் வடிம்பலம் நின்றவன் என்ற பாண்டிய மன்னனு டைய திருவடிகளைக் கடலானது அலம்பியது. அந்தக் கடல் நீரை அகத்திய முனிவர் ஆசமனியம் செய்தார்'' என்ற வரலாற்றைக் கூறினார்.

www.t.me/tamilbooksworld

பாண்டியன் மேலே ஒன்றும் சொல்ல இயலாமல் அன்பும் வியப்பும் தோன்றப் புலவரைப் பார்த்தான்.

## 4. மெய் சொல்வதானால் மதிப்பு உண்டாதல்

ஓர் ஊரில் மாடசாமி என்ற வழிப்பறிக் கொள்ளைக்காரன் ஒருவன் இருந்தான் அவன் மறைந்திருந்து வழியில் போகிறவர்களுடைய பொருள்களை யெல்லாம் கவர்ந்து கொள்வான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஒரு சாமியார் ஒரு நாள் அந்தப் பக்கமாக வந்தார். வழக்கம் போல் மாடசாமி அவரை வழி மறித்து அடிக்கப் போனான். அந்தச் சாமியார், ''அடிக்காதே அப்பா, என்னிடம் நூறு' ரூபாய் இருக்கிறது. அதை உனக்கே கொடுத்து விடுகிறேன். நீ ஒரு காரியம் செய்ய வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் பொய் சொல்லாதே! நீ அவ்வாறு இருந்தாயானால் உனக்கு மேலும் மேலும் நன்மை உண்டாகும்'' என்று கூறினார்.

மாடசாமி அவருடைய அறிவுரையை ஏற்றுக் கொண்டு, அப்படியே நடப்பதாகத்தீர்மானித்தான். பக்கத்து ஊராகிய தலைநகரில் அரசனுடைய அரண்மனை இருந்தது. அந்த அரண்மனைக்குச் சென்று திருட வேண்டுமென்று அவன் எண்ணங் கொண்டான். கறுப்பு உடைகளை அணிந்து கொண்டு அரண்மனைக்குச்சென்றான். எப்படியோ ஏறிக் குதித்து, சன்னல் வழியாக அரண்மனைக்குள் புகுந்தான். அங்கே சாவிகள் மாட்டப்பட்டிருந்தன.

எல்லோரும் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார்கள் அவன் களஞ்சியத்தின் சாவியை எடுத்துக் கதவைத் திறந்து அதனுள் புகுந்தான். அங்குள்ள பெட்டியில் மூன்று இரத்தினங்கள் இருந்தன. மாடசாமி தன்னோடு வேறொருவனை அழைத்து வந்திருந்தான். அவனை வாசலில் காவலாக வைத்து விட்டுத்தான் அரண் மனைக்குள் நுழைந்தான். அந்தப் பெட்டியில்


www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



www.t.me/tamilbooksworld

உள்ள மூன்று இரத்தினங்களையும் எடுத்துக் கொண்டால் இரண்டு பேர்க்கும் சமமாகப் பங்கிட முடியாது என்று எண்ணி மாடசாமி ஓர் இரத்தினத்தை அங்கேயே வைத்து விட்டு, இரண்டை மாத்திரம் எடுத்துக் கொண்டு போனான்.



www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அவன் வாசலுக்கு வந்த பொழுது வாயில் காப்போர்கள் விழித்துக் கொண்டு அவனைப் பிடித்துக் கொண்டார்கள். அவனை அரசனிடம் அழைத்துக் கொண்டு போனார்கள். "அரண்மனையின் உள்ளே புகுந்து திருடினவன் இவன்" என்று காவல்காரர்கள் அரசனிடம் தெரிவித்

www.t.me/tamilbooksworld


தார்கள். அரசன் அவனைப் பார்த்துப், ''நீ என்ன திருடினாய்?'' என்று கேட்டான். பொய்க் சொல்லக் கூடாது என்ற விரதத்தை மேற்கொண்டதால் மாடசாமி நடந்தது நடந்த படியே கூறினான். அரசன், ''ஏன் ஒன்றை மாத்திரம் வைத்து விட்டாய்?''என்று கேட்டான். மாடசாமி, ''எனக்கு ஒன்றும் என் நண்பனுக்கு ஒன்றுமாக இரண்டை மாத்திரம் எடுத்தேன். மீதி ஒன்றை வைத்து விட்டேன்'' என்றான்.

அரசன் உள்ளே போய்ப் பார்த்து ஓர் இரத்தினம் அங்கே இருப்பதைக் கண்டான் திருடனாக இருந்தாலும் மாடசாமி பொய் சொல்லாமல் இருந்ததைக் கண்டு அரசனுக்கு ஆச்சரிய மாக இருந்தது. ஆதலால், மாடசாமியைப் பார்த்து அரசன் ''அப்பா, நீ இன்றோடு இந்தத் திருட்டுத் தொழிலை விட்டு விடு என்னுடைய அரண் மனையில் உனக்கு ஏதாவது வேலை தருகிறேன். கௌரவமாக நீ வாழலாம்'' என்றான்.

மாடசாமிக்கு இது பெரிய வரமாக இருந்தது. சாமியார் செய்த உபதேசத்தின்படி பொய் சொல்லாமல் இருந்ததனால்தான் தனக்கு இந்த நிலை கிடைத்தது என்று அவரை நன்றியுடன் நினைத்தான். பொய் சொல்லாமையினுடைய பெருமையை அவன் நன்றாக அறிந்து கொண் டான்.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

# 5. சாமான்ய நிலை

www.t.me/tamilbooksworld

ஓர் ஊரில் அறம் வளர்த்த முதலியார் என ஒருவர் இருந்தார். அவர் ஒரு வேளாளச் செல்வர். அவருடைய சிறந்த அறிவாற்றலைக் கண்ட அந்த நாட்டு அரசன் அவரைப் பிரதானியாக நியமித்து, அவரிடம் பெருமதிப்பு வைத்திருந்தான்.

அந்த அறம் வளர்த்த முதலியார் சிறந்த அறிவுடையவராக இருந்தமையால், தம்முடைய சொந்த ஊருக்கு வரும் போது பாண்டிய மன்னனைக் கண்டு அளவளாவி விட்டுச் செல்வார்.

அந்தப் பாண்டிய மன்னன் தமிழ்ப் புலமை மிக்கவன்; நல்ல கவிஞன். முதலியார் பேரரசனுடைய பிரதானியாக இருந்தமையால் அவருடைய நட்பானது தனக்குக் கிடைத்ததைப் பெரிய பாக்கியமாகக் கருதினான்.

அந்தப் பாண்டிய மன்னன் சில நூல்களை இயற்றினான். அந்த முதலியாரைப் புகழ்ந்து ஒரு சிறிய நூலை இயற்ற வேண்டும் என்ற ஆவல் அவனுக்கு உண்டாயிற்று. அவரிடம் சொல்லாமல் அவரைப் பற்றி ஒரு கலம்பகம் பாடினான். அந்தச் செய்தி தமக்குத் தெரிந்த போது, ''பிறரால் பாடப் பெறும் தகுதி உள்ள நீங்கள் அடியேனைப் பாடலாமா?'' என்று முதலியார் தம் பணிவைக் காட்டிக் கொண்டார். அந்த நூல் பல

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



புலவர்கள் அமர்ந்திருந்த சபையில் சிறப்பாக அரங்கேற்றப்பட்டது.

ஒரு நாள் பாண்டிய மன்னன் தனக்கு வேண்டிய புலவர் ஒருவரோடு பேசிக் கொண்டிருந்தான். கலம்பகம் பாடியதைக் கேட்டு, முதலியார் சொன்னதை அந்தப் புலவரிடம் சொன்னான். அந்தப் புலவர் முதலியாரின் பணிவைப் பாராட்டவில்லை. ''பார்த்தீர்களா! நான் அப்போதே நினைத்தேன்'' என்றார். ''என்ன நினைத்தீர்கள்?'' என்று பாண்டியன் கேட்டான்.

''அவர் வேளாளர். நீங்கள் முடி மன்னர்களாகிய பாண்டிய வம்சத்தில் உதித்தவர்கள்.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அவர் உங்கள் குடிமக்களில் ஒருவராக இருப்பவர். அப்படி இருக்க, ஒரு சாமான்யமான புலவனைப் போல நீங்கள் பெருமையைக் குறைத்துக் கொள்ள லாமா? அது முறைஅன்று'' என்றார் புலவர். அதைக் கேட்ட பாண்டிய மன்னன் அந்தப் புலவருடைய அறியாமைக்கு இரங்கினான் ''சோழ அரசர்கள் முடி மன்னர்கள் அல்லவா?'' என்று கேட்டான். ''ஆம்'' என்றார் புலவர்.

''கிள்ளி வளவன் என்ற சோழனைப் பற்றிக் கேள்விப் பட்டதுண்டா? அவன் ஒரு வேளாளனைப் பாடியிருக்கிற பாடலை நீங்கள் பார்த்ததுண்டோ?''

'யாரைப் பாடினான்?''

'சிறுகுடி கிழான் பண்ணனைப் பாடியிருக்கிறான்.''

புலவர் சிறிது யோசித்தார்.

பிறகு, ''ஏதோ ஒரு பாட்டு அரைப் பாட்டு அவசியமான சந்தர்ப்பத்தில் பாடியிருக்கலாம். ஆனால் இப்படி ஒரு முழு நூலை யாரும் பாடியிருக்க மாட்டார்கள். நீங்கள் உங்களைக் குறைத்துக் கொண்டது மட்டுமல்லாமல், பாண்டியனுடைய மரபுக்கே இழுக்கு உண்டாகுமாறு செய்து விட்டீர்கள்'' என்று மிடுக்குடன் சொன்னார்.

சிறிது நிதானமாகப் பாண்டியன், ''புலவரே. உங்கள் மனம் எனக்குத் தெரியும். எங்கள் மரபு உயர்வு உடையது. சமானமானது அல்ல என்று

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நினைக்கிறீர்கள். அது தவறு. எங்கள் மரபு ஒன்றற்கு ஒன்று ஒத்து நிற்பவை.''

''எப்படி?'' என்றார் புலவர்.

''சொல்கிறேன்; பாண்டிய மரபு சந்திர குலம் அல்லவா?''

''ஆம்'' என்றார் புலவர்.

''முதலியார் வம்சம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?'' என்று பாண்டிய மன்னன் கேட்டான்.

''வேளாளர் குலம்'' என்று கூறினார் புலவர்,

''அவர்களுடைய குலத்துக்கு முதல்வர் யார் என்று தெரியுமா?'' என்று பாண்டியன் கேட்டான்.

''அவர்களைக் கங்கைக் குலத்தினர் என்று சொல்வார்கள்'' என்று விடை கூறினார் புலவர்.

''நாங்கள் சந்திரனுடைய வழியில் வந்தவர்கள். அவர்கள் கங்கையின் வழியில் வந்தவர்கள். எங்கள் இருவர் மரபிற்கும் மூலமாக இருப்பவர் பரமேசுவரனே. அவர்கள் சமானமானவர்கள் என்று கருதி அந்தப் பரமேசுவரனே தன்னுடைய சடாபாரத்தில் சந்திரனுக்கும் கங்கைக்கும் இடம் கொடுத்து இருக்கிறான். இறைவனே சந்திரனும் கங்கையும் ஒப்பானவர்கள் என்று தலையாலே தாங்கிக் காட்டும் போது, அந்த இருவர்களுடைய மரபும் சமானமானவை, உறவுடையவை என்று நான் சொல்வது பிழையாகுமா? இதைத் தெரிந்துதான்

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நான் பாடினேன்" என்று பாண்டியன் கூறி முடித்த போது, புலவர் வாயடைத்து நின்றார்.

## 6. தர்மம் தலைகாக்கும்

நாக மங்கலத்தில் நாகப்பன் என்ற சிறந்த கொடைவள்ளல் இருந்தான். தன்னிடம் வருகின்ற இரவலர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்றபடி அவன் பொருள் கொடுத்து உதவுவான். சிலருக்கு ஆடைகளையும் கொடுத்து அனுப்புவான். அவனுடைய கொடையை நாடி, வறியவர்களாகிய சில பெண்மணிகளும் அவனை அணுகுவது உண்டு. அவர்களை மரியாதையுடனும் அன்புடனும் வரவேற்று அவர்களுக்குத் தக்க புடவைகளையும் அணிகலன்களையும் கொடுத்து அனுப்புவான்.

நாக மங்கலத்துக்கு அடுத்த ஊரில் குமரேசன் என்பவன் இருந்தான். அவன் பணக்காரக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும், பிறருக்குக் கொடுத்துக் கொடுத்துச் சளைத்துப் போன தகப்பனாருக்குப் பிறந்தவன். ஆதலால் அவனை வறுமை வாட்டியது. யாரிடமும் சென்று எதையும் கேட்கும் பழக்கம் இல்லாதவன் அவன்; மானம் பெரிதென்று வாழ்கிறவன். இவற்றை

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

யெல்லாம் அவனுடைய வயிற்று பசி அறியுமா? பசி மிகுதியானால் மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை, பெண்களின் மேல் வைத்த காதல் ஆகிய பத்தும் இருந்த இடம் தெரியாமல் பறந்து போய்விடும்.

வறுமையினாலும் பசியினாலும் வருந்திய குமரேசன், நாகப்பன் என்ற கொடை வள்ள லிடம் சென்று தனக்கு வேண்டியதைக் கேட்டு வாங்கிக் கொள்வதென்று தீர்மானித்தான். முழு மனத்தோடு அந்தத் தீர்மானத்தைச் செய்யா விட்டாலும் அவனுடைய வயிற்றுப் பசி அவனைப் பிடர் பிடித்து உந்தியது. ஆகையால் அவன் நாகப்பனிடம் போனான்.

நாகப்பனுக்குக் குமரேசன் உயர்ந்த குடும்பத் தில் பிறந்தவன் என்று நன்றாகத் தெரியும். ஆகவே, குமரேசனைக் கண்டவுடன் நாகப்பன், ''தாங்கள் எங்கே வந்தீர்கள்? நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டான். குமரேசன் மிகவும் நாணத்தோடு பண உதவி செய்யுமாறு கேட்டான். ஒரு நாளும் பிறரிடம் எதையும் வாங்கத் துணியாத குமரேசன் கேட்டவுடன், நாகப்பன் அவனுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்தான். குமரேசன் அதைப் பெற்றுக் கொண்டு தன் ஊரை நோக்கிச் சென்றான்.

நாளடைவில் கொடை வள்ளலாகிய நாகப்பனும் வறுமைக்கு ஆளானான். வந்தவர்

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

 www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

களுக்கு எல்லாம் இல்லை என்னாது வாரி வாரி வழங்கியதால் அவனிடம் இருந்த செல்வமெல்லாம் கரைந்து போயிற்று. வேறு ஏதாவது ஊருக்குப் போய் ஏதாவது தொழில் செய்து பிழைக்கலாம் என்று எண்ணி, நாகமங்கலத்துக்கு அருகில் இருந்த சத்திய மங்கலம் என்ற ஊரை அடைத்தான்.

என்ன தொழில் செய்வது என்று அவன் நிச்சயம் செய்து கொள்ள வில்லை. கூலி வேலை செய்வதற்கு அவன் மனம் துணியவில்லை. நாலு வீடுகளில் பிச்சை எடுத்து உண்பதற்கும் அவன் அஞ்சினான். 'மானமே பெரிதென்று வாழ்ந்த

www.t.me/tamilbooksworld


அவனுக்கு இந்தச் சங்கடமான நிலையினின்றும் தப்புவதற்கு வழி ஒன்றும் தெரியவில்லை.

குமரேசன், தற்சமயம் சிறந்த வியாபாரியாக இருந்து பணம் சேமித்து வந்தான். நாகப்பனுடைய வருந்தத் தக்க நிலைமையைச் சிலர் குமரேசனிடம் கூறினர் தன்னுடைய வறிய நிலையில் தனக்கு உபகாரம் செய்து கை தூக்கிவிட்ட நாகப்பனைக் குமரேசன் என்றும் மறக்கவில்லை.

சத்திய மங்கலத்தில் நாகப்பன் பசியும் பட்டினியுமாக இருப்பதைக் கேள்வியுற்று, அவனை அங்கிருந்து உடனே தன் வீட்டிற்கு அழைத்து வந்து நல்விருந்து படைத்தான்.

''நீங்கள் செய்த பேருபகாரத்தால் நான் இப்போது நல்ல நிலையில் இருக்கிறேன். உங்களுக்கு உபகாரம் செய்வதைவிட வேறு என்ன தருமம் இருக்கிறது? அதுவே எனக்கு மிக்க புண்ணியமான காரியம்'' என்று சொல்லி ஆடைகளையும் பணத்தையும் குமரேசன் நாகப்பனுக்கு வழங்கினான். கண்ணீர் மல்க அவற்றை வாங்கிக் கொண்ட நாகப்பன், ''கடவுள் உன்னைக் காப்பாற்றுவாராக!'' என்று சொல்லி அவனை வாழ்த்தி விட்டுப் போனான்.

''தருமம் தலை காக்கும்'' என்பதை நாகப்பன் இப்போது நன்றாக உணர்ந்து கொண்டான்.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 7. செருக்கை இழந்த புலவர்

சோழ நாட்டில் பிறந்து வளர்ந்த புலவர் அவர். தமிழ்ப் புலமையில் சிறந்தவர் ஆயினும் இறுமாப்பு மிகுதியாக உள்ளவர். தம்முடைய புலமைத் திறத்துக்கு யாரும் ஈடு நிற்க முடியாமல் செய்ய வேண்டும் என்பது அவர் கருத்து மற்றப் புலவர்களைக் கண்டால் அவர்களைக் கேள்விகள் கேட்டு, அவர்கள் பாடல்களில் குற்றங்கள் கண்டும் அவமானப் படுத்துவார். நல்லவர்கள் அவரைக் கண்டால் ஒதுங்கி விடுவார்கள்.

அந்தப் புலவர் பாண்டிய நாட்டுக்கும் சென்று தம்முடைய புலமையை வெளிப்படுத்த வேண்டும் என்று நினைத்தார். இதுவரையில் அவர் மதுரைக்குச் சென்றதில்லை. ஆனால் அங்கே புலவர்கள் பலர் இருப்பது அவருக்குத் தெரியும்.

மதுரை மாநகருக்கு அவர் சென்றார். அங்குள்ள புலவர்கள் சோழ நாட்டுப் புலவரை அன்போடு வரவேற்றார்கள். அவரோடு மகிழ்ந்து பேசிச் சோழ நாட்டுச் செய்திகளை விசாரித்து அறிந்து கொண்டார்கள். சோழ நாட்டுப் புலவர் பேசும்போதே அந்தப் பேச்சில் அகங்காரம் குமிழியிட்டது. பாண்டியனுடைய அவைகளப் புலவர்கள் அதைக் கண்டு விட்டார்கள். அவர் தம்முடைய பெருமைகளை அடுக்கிக் கொண்டே

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

போனார். சோழ நாட்டின் சிறப்புக்களைச் சொல்ல மறந்தார். சோழனைப் பற்றிப் பேசவும் மறந்தார்.

மதுரை புலவர்களில் தலைவராகிய ஒருவருக்கு அவரை எப்படியாவது தலை குனியச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. 'படித்தவனாம்! தமிழ்ப் புலவனாம்! சிறிதாவது பணிவு இருக்கிறதா? தமிழின் எல்லையைக் கண்டவரா? இவன் அகத்தியரின் அவதாரமாகத் தன்னை நினைத்துப் பேசுகிறானே!' என்று அவரிடம் அவமதிப்பே உண்டாயிற்று.

''அதெல்லாம் சரி புலவரே, நாம் இப்போது ஏதாவது பாடல் சொல்லலாமே. உங்கள் சோழ மன்னனுடைய புகழை வைத்து ஒரு பாட்டுப் பாடுங்கள்'' என்றார் புலவர் தலைவர்.

சோழ நாட்டுப் புலவர் தக்க சமயம் வந்தது என்று கருதிப் பாடலைச் சொல்ல ஆரம்பித்தார். சோழனுடைய வீரத்தைத் தெரிவிக்கும் ஒரு பாடலைப் பாடினார்.

''சோழன் மகா வீரன். போரில் புறம் கொடாமல் வெல்பவன். ஆகவே அவன் கவசம் அணியும் போது முதுகுக்கு அணிவதில்லை. யாருக்கும் புறமுதுகு காட்டாத நிலையில் அதற்குப் பாதுகாப்பு எதற்கு?'' என்ற பொருளை வைத்து. பாட்டின் முதல் இரண்டு அடிகளைப் பாடினார் புலவர். பின் இரண்டு அடிகளிலே இதற்கு உரிய காரணத்தைச்சொல்லாம் என்று நினைத்திருந்தார்.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld


இரண்டு அடிகளைப் பாடியவுடன் மதுரைப் புலவர் கையைக் காட்டினார்.

''புலவரே நிறுத்துங்கள். இந்தப் பாடல் யாருடைய புகழைச் சொல்வது?'' என்று கேட்டார்

''ஏன்? இதுகூடத் தெரியவில்லையா? எங்கள் சோழ மன்னனுடைய புகழைத்தான் சொல்கிறது. அவன் புறமுதுகு காட்டாத பெரிய வீரன் என்பதை விளக்குகிறது'' என்றார் சோழ நாட்டார்.

''இந்த இரண்டு அடிகளில் அப்படி இல்லையே! உங்களுடைய சோழ மன்னன் முதுகுக்குக் கவசம் இடுவதில்லை என்பதுதானே இருக்கிறது'' என்று கேட்டார் புலவர் தலைவர்.

''ஆம். அதற்குக் காரணம் அவன் புற முதுகு காட்டாத வீரன் அன்றோ? இந்த இரண்டு அடிகளிலிருந்தே அதை ஊகித்துக் கொள்ளலாமே. பாட்டு முழுதும் சொல்வதற்கு முன்பே இந்தப் பொருள் குறிப்பாகப் புலப்படுகிறதே'' என்றார் சோழ நாட்டுப் புலவர்.

''இல்லை! இல்லை! இந்த இரண்டு அடிகளிலே சோழன் புகழ் வெளிப்படவில்லை. சோழனுக்கு இகழ்ச்சியாகக் கூடப் பாட்டை முடிக்கலாம்'' என்றார் மதுரைப் புலவர்.

இப்படி அந்தப் புலவர் சொன்னதும் சோழ நாட்டுப் புலவருக்குச் சினம் மூண்டது. ''பாட்டில் வெளிப்படையாகச் சோழனது பெருமை விளங்குகிறது. நீங்கள் காக்கை வெள்ளை என்பது போலப் பேசுகிறீர்களே!'' என்றார்.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



www.t.me/tamilbooksworld

"இதே இரண்டடிகளை வைத்துக் கொண்டு உங்கள் சோழ மன்னனை இகழ்ந்தும், எங்கள் பாண்டிய மன்னனைப் புகழ்ந்தும் பின் இரண்டு அடிகளைச் சேர்த்துப் பாடலாம்" என்றார் மதுரைப் புலவர் தலைவர்.



www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சோழ மண்டலப் புலவர் ஆத்திரத்துடன், 'எங்கே பாடுங்கள் பார்க்கலாம்" என்று சொன்னார்.

மதுரைப் புலவர் அமைதியாகப் பாட்டைச் சொல்லத் தொடங்கினார். சோழன் முதுகுக்குக் கவசம் இடான் என்று சோழ தேசப் புலவர் சொன்ன செய்திக்கு உரிய காரணம் இன்னதென்

www.t.me/tamilbooksworld

பதைப் பின் இரண்டு அடிகளில் வைத்துப் பாடினார்.

"சோழன் ஏன் முதுகுக்குக் கவசம் இடுவதில்லை தெரியுமா? புறங்காட்டாத இயல்பு காரணம் அன்று. சோழனோடு போர் செய்யும் ஆற்றல் பாண்டியனுக்குத்தான் உண்டு. அவனுடன் பாண்டியன் போர் செய்தால் நிச்சயம் சோழன் புறமுதுகிட்டு ஓடுவான். ஆனால் அவன் புறங் கொடுப்பதைக் கண்டவுடன் பாண்டியன் அவனை ஒன்றும் செய்ய மாட்டான். அவன் முதுகின்மேல் வேலை எறிய மாட்டான். அவ்வளவு உதார குணமும் பெருவீரமும் உடையவன் பாண்டிய மன்னன். தன் முதுகில் பாண்டியன் வேலை எறிய மாட்டான் என்ற உறுதி இருக்கும் பொழுது சோழன் அஞ்ச வேண்டிய அவசியமே யில்லை. அதனால்தான் சோழ மன்னன் தன் முதுகுக்குக் கவசம் அணிவதில்லை"

இப்படியெல்லாம் பொருள் கூறும்படியா அந்தப் பாடல் அமைந்தது பாவம்! சோழ மண்டலப் புலவர் வாயடைத்துப் போனார். எது சோழனது வீரத்தை வெளிப்படுத்துமென்று நினைத்தாரோ, அதையே வைத்து அவனுடைய இழிவையும் பாண்டிய மன்னனுடைய உயர்வையும் காட்டும்படி மதுரைப் புலவர் பாடிவிட்டார்.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

புலவர் தம்முடைய செருக்கழிந்து அறிவு பெற்றார்.

# 8. தாய் அன்பு

ஓர் ஊரில் ஒரு தாய்க்கு நான்கு பிள்ளைகள் இருந்தார்கள். இந்த நான்கு பேர் சந்திரன் சூரியன், வருவணன், வாயுதேவன் முதலியோர் ஆவர். அன்னை நான்கு பிள்ளைகளையும் மிகவும் அன்புடன் வளர்த்து வந்தாள். ஒரு நாள் அவர்களுக்குத் தெரிந்தவர் வீட்டில் நடந்த விருந்திற்கு நான்கு பிள்ளைகளையும் அழைத்திருந் தார்கள். அந்நால்வர்களும் விருந்துக்குச் செல்ல ஆயத்தமாயினர். அப்பொழுது தாய் அவர்களை நோக்கி, குழந்தைகளே, விருந்தில் பட்சணங்கள் போடுவார்கள் அவற்றில் எனக்கு சிலவற்றை எடுத்து வாருங்கள்" என்று கூறி அனுப்பினாள்.

நான்கு பேர்களும் விருந்துக்குப் போனார்கள். மிகவும் சுவையான காய்கறிகளையும், பட்சணங் களையும் விருந்து படைத்தவர்கள் போட்டார்கள். சூரியன் தன்னுடைய தாய் கூறியற்றை நினைத் துக் கொண்டு பட்சணங்களைத் தனியே எடுத்து வைக்கலாமா என்று எண்ணினான். மற்றப் பிள்ளைகள் இருக்கிறார்களே, அவர்கள் எடுத்து வைப்பார்கள், நாம் எடுத்து வைக்க வேண்டாம்

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என்று எண்ணி, அப்பட்சணங்கள் அனைத்தையும் தானே தின்று விட்டான்.

வருணன் தனக்குப் போட்ட பட்சணங்களில் பாதி எடுத்துத் தனியே வைத்தான் மீதிப் பாதியைத் தின்ற பொழுதும் திருப்தி உண்டாகவில்லை. ''நம்முடைய தம்பிமார்கள் பட்சணங்களைக் கொண்டுபோய்க் கொடுப்பார்கள். அது அம்மாவுக்குப் போதும். இதையும் நாமே தின்று விடலாம்'' என்று எடுத்து வைத்ததையும் தின்று விட்டான்.

வாயுதேவனும் முதலில் தன்னுடைய பட்சணங்களைத் தாய்க்காக எடுத்து வைத்தான். ஆனால் அவனுக்கும் சபலம் தாங்க முடியவில்லை. ''பாதி சாப்பிட்டு விடலாம்'' என்று பாதியைச் சாப்பிட்டான். மறுபடியும் அவனுக்கு ஆவல் எழவே, மீதிப் பாதியையும் தானே தின்று தீர்த்தான்.

சந்திரன் தனக்குப் போட்ட பட்சணங்கள் எல்லாவற்றையும் எடுத்துத் தனியே வைத்துவிட்டு, மற்றவற்றைச்சாப்பிட்டான். எல்லோரும் சாப்பிட்ட பிறகு அவரவர்கள் தங்கள் தங்கள் வீடு நோக்கிப் போனார்கள். சூரியனும் அவனது தம்பி மூவரும் ஆக நால்வருமாக தங்கள் வீட்டை அடைந்தனர்.

தாய் அவர்களை நோக்கி, ''எனக்குப்பட்சணம் கொண்டு வந்தீர்களா?'' என்று கேட்டாள்.

சூரியன் ஒரு பதிலும் பேசவில்லை. வாயு தேவனும் வருணனும் தலையைக் குனிந்து கொண்டார்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld




www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

கள். சந்திரன் மட்டும், ''அம்மா உனக்காக நான் எல்லாப் பட்சணங்களையும் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று சொல்லி அவற்றைத் தன் தாயிடம் கொடுத்தான். அவள் அதை வாங்கி தான் ஒரு பாதியை வைத்துக் கொண்டு மறுபாதியைச் சந்திரனிடம் கொடுத்து, அவனை உண்ணுமாறு பணித்தாள். தன்னிடமுள்ள பட்சணங்களை நன்றாகச் சுவைத்துத் தின்றாள். சந்திரனும் அம்மா கொடுத்ததை உண்டு மகிழ்ச்சியடைந்தான்.

அப்பொழுது அந்தத் தாய் தன்னுடைய பிள்ளைகளைப் பார்த்து, ''நீங்கள் நான்கு பேரும் என்னுடைய வயிற்றில் பிறந்திருந்தாலும், சந்திரனைத் தவிர மற்ற மூன்று பேர்களும் தங்களுடைய வயிறே பெரிதென்று எண்ணி விட்டீர்கள்; நான்

www.t.me/tamilbooksworld

ஒருத்தி இருப்பதை நீங்கள் மூவரும் எண்ண வில்லை. சந்திரன் ஒருவன்தான் என் மனதுக்கு உகந்த பிள்ளையாக இருக்கிறான். சூரியனே உன்னுடைய வெய்யிலில் காய்ந்தவர்கள் ''நாசமாய்ப் போகிற இந்தச் சூரியன் என்ன கொளுத்து கொளுத்துகிறான்'' என்று உன்னைத் திட்டட்டும். ஏ வாயுதேவா, நீ வீசியடிக்கும் பொழுது, ''இது என்ன, பேய்க்காற்றாக இருக்கிறதே, இது நின்று தொலைக்காதா'' என்று உன்னைத் திட்டட்டும். வருணனே நீ அடா மழை பெய்யும் பொழுது ''என்ன பிரளய காலத்து மழையாக இருக்கிறதே! இதற்கு என்ன இப்பொழுது கேடு வந்துவிட்டது? நீ நாசமாகப் போக'' என்று திட்டட்டும். ஆனால் சந்திரனை சிறு குழந்தைகளும், பெரியவர்களும், காதலர்களும் மகிழ்ந்து வரவேற்று, எல்லோரும் நிலவில் விளையாடி மகிழ்ந்து உன்னை வாழ்த்துவார்களாக! மற்றவர்களுக்கு எல்லாம் திட்டுக் கிடைத்தாலும், உனக்கு வாழ்த்தே கிடைக்கட்டும்', என்று கூறினாள்.

தாயினிடம் அன்பும் விசுவாசமும் கொண்ட சந்திரனை எல்லோரும் புகழ்கின்றனர். இராமபிரானைக்கூட ''ராமச்சந்திர மூர்த்தி'' என்றும் கண்ணனை 'கிருஷ்ண சந்திரன்'' என்றும் பாராட்டுகிறார்கள்.

தாயிடம் உள்ள பக்தி சந்திரனுக்கு எல்லோரும் பாராட்டும் நிலையை வாங்கித் தந்தது.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 9. முயற்சி திருவினையாக்கும்

www.t.me/tamilbooksworld

கோபாலன் ஒரு பிரம்மச்சாரி அவனுக்குத் தாயுமில்லை; தந்தையுமில்லை; சகோதரர்களும் இல்லை. அவன் ஒரு தனிக்கட்டை அந்த ஊரிலுள்ள குடும்பங்களுக்குச் சென்று, அவர்களுக்கு வேண்டிய காய்கறிகளை வாங்கிக் கொடுத்தல், கடையில் வேண்டிய சாமன்களை வாங்கித் தருதல், இன்னும் அவர்கள் இட்ட பணிகளைச் செய்து நிறைவேற்றுதல் ஆகிய காரியங்களைச் செய்து வந்தான் அதனால் அவர்கள் மகிழ்ந்து அவனுக்கு அவ்வப்போது சாப்பாடு போட்டார்கள். பல குடும்பங்கள் உள்ள ஊர் ஆகையால் ஒவ்வொரு வேளையும் வெவ்வேறு வீடுகளில் அவனுக்கு உணவு கிடைத்து வந்தது.

www.t.me/tamilbooksworld

அவன் ஒரு சங்கீத வித்துவானிடம் பழகினான். அவருக்கு வேண்டிய வேலைகளைச் செய்தான். அதனால் அவர் மகிழ்ந்து அவனுக்குச் சங்கீதம் கற்றுக் கொடுத்தார். கோபாலன் நல்ல புத்திசாலி. ஆகையால் சங்கீதத்தை நன்றாகக் கற்றுக் கொண்டான். பல கீர்த்தனைகளை மனப்பாடம் பண்ணினான். சிட்டா ஸ்வரம் பாடுதல், கல்பனா ஸ்வரப் பாடுதல் முதலியவற்றில் அவன் வல்லவனாகத் திகழ்ந்தான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



www.t.me/tamilbooksworld



www.t.me/tamilbooksworld

சில கல்யாணங்களில் கச்சேரி செய்யும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது அதனால் பொருள் வருவாயும் உண்டாயிற்று. பொருள் சிறிது சேர்ந்தாலும் தன்னை ஆதரித்து வந்த குடும்பங்களுக்கு உதவி செய்வதையும் அவர்கள் வழங்கிய சாப்பாட்டைச் சாப்பிடுவதையும் அவன் விடவில்லை.

அவனுடைய உடல் மெருகேறித் தளதள வென்று வளர்ந்து பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தான். அவனை ஆதரித்த வீட்டுக்காரர் ஒருவர் அவனைப் பார்த்து, ''கோபாலா உனக்குச் கல்யாண வயது வந்து விட்டது. ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு குடியும் குடித்தனமு மாக வாழ்வதற்கு நீ முயற்சி செய்ய வேண்டும்.

www.t.me/tamilbooksworld

 www.t.me/tamilbooksworld

சங்கீதக் கச்சேரிகளில் உனக்குப் பணம் கிடைப்பதனால் குடும்பம் நடத்துவதில் ஒரு சங்கடமும் இராது'' என்றார். அதைக் கேட்ட கோபாலன், ''இந்தப் பஞ்சையாகிய எனக்கு யார் பெண் கொடுப்பார்கள்?'' என்றான். அந்தப் பெரியவர், ''நீ பழைய கோபாலன் அல்லவே. ஒரு பெரிய சங்கீத வித்துவான் அல்லவா? உனக்கு யாரும் குதி போட்டுக் கொண்டு பெண்ணைத் தருவார்கள்'' என்றார். 'உங்களுடைய வாக்கு பலிக்கட்டும். கடவுள் சித்தம் எப்படியோ அப்படியே நடக்கும்'' என்று கோபாலன் சொன்னான்.

www.t.me/tamilbooksworld

கோபாலனைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொன்ன அந்தப் பெரியவரே ஒரு குடும்பத்திலுள்ள அழகான கன்னிகையைப் பார்த்து அவனுக்குத் திருமணம் செய்து கொடுக்கத் தீர்மானம் செய்தார். பெண் அழகாக இருந்தாள். கோபாலன் அந்தப் பெண்ணை வந்து பார்த்தான். அவனுக்குத் திருப்தியாக இருந்தது. அந்தப் பெண்ணுக்கும் அவனைப் பார்த்துத் திருப்தியாக இருந்தது.

பெரியவர்கள் நிச்சயித்தபடி ஒரு நல்ல நாளில் அந்தப் பெரியவரே கோபாலனுக்குத் தந்தையைப் போல இருந்து திருமணத்தை நிறைவேற்றினார். அதோடு அவன் குடும்பம் நடத்துவதற்கு ஒரு நல்ல வீட்டைப் பார்த்து ஏற்பாடு செய்து கொடுத்

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தார். ஒரு நல்ல நாளில் கோபாலன் தன் மனைவியுடன் அந்த வீட்டிற்குக் குடி புகுந்தான்.

ஒவ்வொரு நாளும் அவன் தனக்குச் சங்கீதம் சொல்லி வைத்த சங்கீத வித்துவானையும் தனக்குத் திருமணம் செய்து வைத்த பெரியவரையும், மனமார வாழ்த்தினான். அவர்களை அடிக்கடிப் போய்ப் பார்த்து நமஸ்காரம் செய்து விட்டு வந்தான்.

ஆரம்பத்தில் ஏழையாக இருந்தாலும் இடைவிடாத முயற்சியினால் முன்னுக்கு வந்த கோபாலனைக் கண்டு எல்லோரும் பாராட்டினர்.

''முயற்சி திருவினையாக்கும்'' என்ற பழமொழி அவன் வாழ்க்கையில் பலித்தது.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

## 10. கடலும் கிணறும்

அந்த ஊர் மிகச்சிறியது. ஆனாலும் பெரிய உள்ளங்களைப் பெற்ற உபகாரிகள் சிலர் அதில் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய பெருமைகளை உலகுக்குத் தெரிவிப்பதற்காகவே, குறுகிய மனம் உடைய பலரும் அந்த ஊரில் இருந்தார்கள். நல்லவர்களுக்குள் ஒருவர் சில நிலங்களை வைத்துக் கொண்டு தன்னால் முடிந்த அளவுக்கு

www.t.me/tamilbooksworld

அறம் செய்து வந்தார். வேறு பலரோ நாளுக்கு நாள் தங்களுடைய செல்வத்தைப் பெருக்கிக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். அந்தச் செல்வர் கள் வாழ்வதனால் அந்த ஊருக்குப் புகழ் உண்டாகவில்லை. சின்னக் குடித்தனக்காரராகிய வேளாளர் ஒருவர் இருந்ததனால் வேறு ஊர்களி லிருந்து அவரை நாடி ஏழைகள் வருவார்கள்; புலவர்களும் வருவார்கள். அந்தப் புலவர்கள் தாங்கள் போகும் இடங்களில் எல்லாம் இந்த வேளாளருடைய புகழைப் பரப்பிக் கொண்டே போவார்கள். இதனால் அந்த ஊரினுடைய புகழ் எங்கும் பரவியது.

அந்தப் பேருபகாரியான வேளாளருக்குத் தமிழ் மொழியில் ஆர்வம் அதிகமாக இருந்தது. புலவர்களிடம் பாடல்களைக் கேட்டு அவர் இன்பம் அடைவார். தமிழ் மொழியினிடம் அன்பும், தரும சிந்தனையும் ஒன்றாகச் சேர்ந்த அவரிடம் யாருக்குத் தான் அன்பு பிறக்காது?

ஔவையாருடைய காதில் அந்த நல்லவருடைய புகழ் விழுந்தது. நல்ல மனிதர்கள் எங்கே இருந்தாலும் அவர்களைத் தேடிச் சென்று பார்த்துப் பாராட்டுவது அந்தப் பெருமாட்டிக்கு இயல்பு அந்த உபகாரியான வேளாளரைப் பார்க்க விரும்பி ஒரு நாள் அவருடைய ஊருக்குப்போனார். ஊருக்குள்ளே நடந்து போன போதுபல பெரிய மாளிகைகளை ஔவையார் கண்டார் "இந்த மாளிகைகளில் ஒன்றில் தானே அந்தப் பெரியவர்

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

 www.t.me/tamilbooksworld

வாழுகிறார்'' என்று தம்மோடு வந்தவர்களை ஔவையார் கேட்டார்.

'இல்லை அவர் சிறிய வீட்டில் வாழ்கிறார். இந்த மாளிகையில் வாழ்கிறவர்கள், அவரைக் காட்டிலும் பெருஞ் செல்வர்கள்'' என்று அவர்கள் சொன்னார்கள்

''இந்த ஊரில் இவ்வளவு பெரிய செல்வர்கள் இருக்கிறார்கள் என்று யாரும் என்னிடம் சொல்ல வில்லையே'' என்றார் அந்தத் தமிழ் மூதாட்டியார். அதற்கு யாரும் விடை ஒன்றும் சொல்லவில்லை.



ஔவையார் அந்த வேளாளச் செல்வரது வீட்டிற்குச் சென்றார். ஔவையார் வருவதை அறிந்த அந்தச் செல்வர் அவரை எதிர் கொண்டு

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



அழைத்து உபசாரம் செய்தார். ஔவையாரோடு வேறு சில புலவர்களும் வந்திருந்தார்கள் 'இந்தத் தமிழ் மூதாட்டியாருடைய வாயிலிருந்து எந்தச் சமயத்தில் என்ன முத்து உதிருமோ? அதனை உடனே பொறுக்கிக் கொள்ள வேண்டும்? என்று மிகுத்த ஆவலோடு அவர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தச் செல்வர் எல்லோருக்கும் ஆறு சுவைகளை உடைய விருந்துணவை அளித்தார். யாவரும் விருந்துணவை உண்டு விட்டு, தாம்பூலம் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தனர். அப்போது அந்த ஊர்ப் பெரியவர் ஒருவர் ஔவையாரை நோக்கி, ''தாங்கள் இந்த ஊருக்கு எழுந்தருளியது கலைமகளே எழுந்தருளியது போல் உள்ளது. தங்களைப் போன்ற பெரியவர்கள் இந்தச் சிறிய ஊருக்கு வருவதற்கு நாங்கள் என்ன புண்ணியம் செய்தோமோ தெரியவில்லை! நாங்கள் செய்த புண்ணியம் என்று சொல்வதற்கில்லை, இந்தப் புண்ணியவான் இந்த ஊரில் வாழ்வதனால்தான் தங்களைப் போன்றவர்கள் இந்த ஊரைத் தேடி வருகிறார்கள்'' என்றார்.

இதற்குள் அந்த உபகாரி, ''தாத்தா, வேறு விஷயங்களைப் பற்றிப் பேசுங்கள்'' என்றார்.

கிழவர் மேலும் ஔவையாரைப் பார்த்து, 'தாங்கள் தெய்வாம்சம் உடையவர்கள். தங்கள் திருவாக்கால் இந்தப் புண்ணியவானை

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



ஆசீர்வாதம் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்''

ஆனால், அந்த வேளாளரோ ஔவையாரைப் பார்த்து, "என்னிடமுள்ள அபிமானத்தால் அந்தப் பெரியவர் அவ்வாறு பேசுகிறார். இந்த ஊரில் பல பெரிய செல்வர்கள் வாழுகிறார்கள் அவர்களைக் காட்டிலும் நான் மிகவும் சிறியவன் இறைவன் அவர்களுக்கு அளவற்ற செல்வத்தைக் கொடுத்திருக்கிறான். பொதுவாக அவர்களையும் வாழ்த்துவது தான் முறை. அடியேனைத் தனியாக வாழ்த்துவதற்கு என்ன செய்து விட்டேன்?" என்றார்.

www.t.me/tamilbooksworld

ஔவையார் இதுவரையில் பேசாமல் இருந்தவர் இப்போது தம்முடைய திருவாயைத் திறந்தார். முன்னால் பேசிய கிழவரைப் பார்த்து, "இந்த ஊரில் வேறு செல்வர்களும் இருக்கிறார்கள் என்றார்களே. அவர்கள் இவரைவிடப் பணக்காரர்களா?'' என்று கேட்டார்.

''ஆமாம் அவர்கள் தங்களுடைய பணத்தைச் செலவழிக்காமல் மேலும் மேலும் சேர்த்துக் கொண்டே வருகிறார்கள். ஆனால் இவருக்கோ பணத்தைச் செலவழிக்கத் தெரியுமே ஒழியச் சேர்க்கத் தெரியாது. அதற்கு எத்தனையோ உதாரணங்களைச் சொல்வேன்'' என்றார்.

''அப்படியா! ஏதாவது ஒன்று சொல்லுங்கள் கேட்கிறேன்'' என்று ஔவையார் சொன்னார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld


"இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்தப் பக்கங்களில் பஞ்சம் வந்தது போதிய தண்ணீர் இல்லாமல் நெற்பயிர்கள் சரியாக விளையவில்லை. முன்பே இருக்கிறதைப் பாதுகாப்பாக வைத்துக் கொண்டு செட்டாக வாழ வேண்டி இருந்தது. அப்போது மற்றப் பணக்காரர்கள் தங்கள் வீட்டுவாசல்களை அடைத்துக் கொண்டிருந்தார்கள் இந்தப் புண்ணியவானோ எப்போதும் போல் வருபவர்களை வரவேற்றார். இவர் சாப்பிட்டாரோ, இவர் மனைவி சாப்பிட்டாளோ, நான் அறியேன். ஊரெல்லாம் திண்டாடும் அந்தச் சமயத்திலும் தம்மை நாடிவரும் புலவர்களுக்கு ஒரு வேளையாவது சோறு போட்டு அனுப்பிக் கொண்டிருந்தார். அப்போது இவரை நாங்கள் தெய்வப் பிறவி என்றே நினைத்தோம்" என்றார் அவர்.

ஔவையார், "இவரைப் பாட வேண்டும் என்று சொல்கிறீர்களா" என்று கேட்டார்.

"ஆமாம்" என்றார் அவர்.

அந்த உபகாரியோ, "இந்த ஊர் வாழ்ந்தால் தான் நான் வாழ்வேன். ஆகையால் இந்த ஊரில் வாழும் எல்லோரையுமே வாழ்த்துங்கள் என்றார்.

"உங்கள் விருப்பப்படியே செய்கிறேன்" என்றார் ஔவைப் பிராட்டி.

'அவர்கள் பெரிய செல்வர்கள் என்று சொன்னீர்கள். உங்களுக்கு அத்தனை செல்வம் இல்லை அல்லவா" என்று ஆர அமர அந்த மூதாட்டியார் கேட்டார்.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஆமாம்'' என்றார் உபகாரி.

''அவர்கள் செல்வம் பெரிய கடலைப் போன்ற தானால் உங்கள் செல்வத்தைச் சிறிய கிணறாகச் சொல்லலாம் அல்லவா?'' என்று கேட்டார்.

'தங்கள் திருவுள்ளம் எதுவோ அவ்வாறே சொல்லலாம்'' என்றார் அவர்.

''அவர்களுக்கு மேலும் மேலும் செல்வம் சேரட்டும் என்று பாடப் போகிறேன்'' என்றார் தமிழ் மூதாட்டியார்.

இப்போது யாரும் பேசவில்லை.

ஔவையார் பாடலைச் சொல்லத் தொடங்கினார். அந்தப் பாட்டின் கருத்து வருமாறு.

பிறரைக் கடல் என்றும் அவரைக் கிணற்று நீர் என்றும் பாடினார் ஔவையார் வெறும் அளவை எண்ணி அவர் அவ்வாறு சொல்லவில்லை. கடல் அளவில் பெரியதுதான் ஆனாலும் அதிலிருந்துஒரு சொட்டு தண்ணீரை யாவது தாகத்துக்குக் குடிக்க முடியுமா? அதற்கு அருகிலேயே தோண்டிய ஒரு கிணற்றில் சிறிய ஊற்றிலிருந்து வரும் நீரே? தாகத்தைப் போக்கும். சிறிய ஊற்றாக இருந்தால் என்ன? கையில் அள்ளிக் குடிக்கப் போதாதா வற்றாமல் தண்ணீர் வந்துகொண்டே இருக்குமே!

கடலில் உள்ள நீரை மேகங்கள்உறிஞ்சிவற்றச் செய்து எங்கோ கொண்டுபோய் மழையாகப் பொழிகின்றன. அதைப் போல அந்தச் செல்வர்களுடைய

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

செல்வத்தை வேறு யாராவது துன்புறுத்தி அடித்துக் கொண்டு போய்ச் செலவழிப்பார்கள். ஆனால் இவரிடம் எந்தத் திருடனும் வர நினைக்க மாட்டான். இவர் நீடூழி காலம் வாழ்ந்தால் எப்படியாவது தருமத்தைப் புரிந்து கொண்டே இருப்பார். பணக்காரர்கள் தங்களிடம் பணக் சேர்வதனால் வரும் துன்பங்களைத் தருமம்செய்து போக்கி கொள்ளலாம். அவ்வளவு செய்யாதவர்களுக்குத் பணம்சேர சேரத் துன்பமும் உடனே வந்து சேரும்'' என்றார் ஔவையார். அதனால் அவர்களுக்குத் துன்பம் உண்டாகட்டும் என்று சபிக்கவில்லை. இன்னும் பணம் சேரட்டும் என்று சொன்னார்.

www.t.me/tamilbooksworld

## 11. பிள்ளையார் தந்த பாக்கியம்

ஒரு பெண்ணுக்குச் சிறிய வயதிலிருந்தே பிள்ளையார் என்றால் மிகவும் பிரியம் மரக்கட்டையினால் செய்த பிள்ளையாரை வாங்கி அதற்கு மலர்களைப் போட்டுப் பூசை செய்வா. தான் எதை உண்டாலும் அந்தப் பிள்ளையாருக்குக் காட்டித் தான் சாப்பிடுவாள். அவளுக்குத் திருமணத்திற்கு ஏற்ற வயது வந்தது. ஒரு நல்லப் பிள்ளையாகப் பார்த்து அவளுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கணவன் வீட்டிற்குப் போன போதும் கூட அவள் அந்தப் பிள்ளையாரை எடுத்துக் கொண்டு போனாள். அதைவிடமால் வைத்துக் கொண்டிருப்பதைக் கண்ட அவள் மாமியார், "என்னடி இது பைத்தியம் மாதிரி ஒரு கட்டையை வைத்துக் கொண்டு கொஞ்சுகிறாய்?'' என்று கேட்டாள்.

''இது கட்டையல்ல. பிள்ளையார், கண் கண்ட தெய்வம். இதனால் எனக்கு எவ்வளவோ நன்மை உண்டாயிற்று'' என்று அந்தப் பெண் சொன்னாள். அவளுடைய மாமியார், ''அந்தக் கட்டையினிடத்தில் உனக்கு அவ்வளவு பிரியம் என்றால் உனக்குக் கணவன் எதற்கு? இந்த வீட்டிலே நீ இருக்க வேண்டியதில்லை. இந்தக் கட்டையைத் தூர எறிந்து விட்டு வந்தால், நீ இங்கே இருக்கலாம். இல்லாவிட்டால் நீயும் இந்தக் கட்டையை எடுத்துக் கொண்டு போய்விடு'' என்று சொன்னாள்.

அதைக் கேட்டு அந்தப் பெண் மிகவும் கலங்கினாள். என்ன செய்வதென்று அவளுக்குத் தெரியவில்லை. பிள்ளையாரைக் கைவிட அவளுக்குச் சிறிதும் மனம் வரவில்லை. ஆகையால் ஒரு நாள் இரவு பிள்ளையாரை எடுத்துக் கொண்டு அந்த வீட்டை விட்டு புறப்பட்டாள்.

இரவு நேரத்தில் எங்கே தங்குவது என்று தெரியாமல் விழித்த போது அருகில் ஓர் அரச

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld


மரம் இருப்பதைக் கண்டாள். ''இரவு நேரத்தை இதன் மேல் ஏறிக் கழித்து விடலாம். காலையில் எழுந்தவுடன் பார்த்துக் கொள்ளலாம்'' என்று எண்ணி அதன் மேல் மெல்ல ஏறினாள். ஒரு கிளையில் சாய்ந்து கொண்டு, கொம்பு ஒன்றைக் கையால் இறுகப் பிடித்துக் கொண்டிருந்தாள். மற்றொரு கையால் பிள்ளையாரைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

அந்த இரவு வேளையில் சில திருடர்கள் தாங்கள் திருடிக் கொண்டு வந்திருந்த பணத்தையும், நகைகளையும் அந்த மரத்தின் அடியில் உட்கார்ந்து கொண்டு பங்கு போட்டுக் கொண்டிருந்தார்கள். மரத்தின் மேலிருந்த பெண் சிறிது தூக்க மயக்கத்தில் தன் கையில் பிடித்திருந்த பிள்ளையாரை நழுவ விட்டு விட்டாள். அது பொத்தென்று திருடர்களுக்கு நடுவில் விழுந்தது. அதைக் கண்டு அந்தத் திருடர்கள் பயந்து போய், ''யாரோ இங்கே மனிதர்கள் இருக்கிறார்கள். நம்மைக் கண்டு பிடித்து விடுவார்கள்'' என்று சொல்லி, பணத்தையும் நகைகளையும் அப்படியே போட்டு விட்டுச் சென்று விட்டார்கள்.

விடிந்த பிறகு அந்தப் பெண் கீழே இறங்கி வந்தாள். தன்னுடைய பிள்ளையாரும், அவருக்கு அருகில் நகையும் பணமும் இருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தாள். எல்லாவற்றையும் வாரி

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



www.t.me/tamilbooksworld

எடுத்துக் கொண்டு, "இவற்றைக் கண்டால் நம்முடைய மாமியார் நம்மைத் திட்டமாட்டாள். நம்மை ஏற்றுக் கொள்வாள்" என்று எண்ணி, நகைகளையும் பணத்தையும் பிள்ளையாரோடு எடுத்துக் கொண்டு வீட்டிற்குப் போனாள்.

"அத்தை, அத்தை, பார்த்தீர்களா, இந்த ஆச்சரியத்தை! என்னுடைய பிள்ளையாரைக் கட்டை என்று சொன்னீர்களே, இவர் எனக்கு இந்தப் பணத்தையும் நகைகளையும் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார். பாருங்கள்; பிள்ளை யாரை நம்பியதால் எனக்குக் கிடைத்த இலாபம் இது" என்று சொன்னாள்.

அவளுடைய மாமியாருக்கும், பணத்தையும் நகைகளையும் கண்ட பிறகு மருமகள் மீதிருந்த

www.t.me/tamilbooksworld

 www.t.me/tamilbooksworld

கோபம் நீங்கி விட்டது. பிள்ளையாரின் பெருமை களை உணர்ந்து கொண்டாள். ''நீ இந்தப் பிள்ளையாரோடு சுகமாக வாழ்ந்திரு இவரரு ளால் உனக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கட்டும்'' என்றாள். அது முதல் அந்தப் பெண் அங்கே ஆனந்தமாக வாழ்ந்து வந்தாள்.

www.t.me/tamilbooksworld

## 12. சும்மா இருக்கிற சாமியார்

www.t.me/tamilbooksworld

ஒரு கோவிலில் ஒரு புதிய தர்மகர்த்தா வந்து சேர்ந்தார். பழம் பெருச்சாளிகளைப் போக்கி விட்டு ஆற்றல் உள்ள புதிய ஊழியர் களை நியமிக்க வேண்டும் என்ற தீவிர எண்ணத் தோடு அவர் வேலையை ஒப்புக் கொண்டார். பழைய கணக்குகளை வருவித்துப் பார்த்தார். கோவிலில் கொடுக்கப்படும் பிரசாதங்களை எப்படி எப்படி விநியோகம் செய்கிறார்கள் என்பதை அறிய, அதற்குரிய கணக்குப் புத்தகத்தை எடுத் துக் கவனித்துப் பார்த்தார். கண்ணை ஓட்டி வருகையில் ஒரு வரியிலே அவருடைய பார்வை நின்று விட்டது. ''இது என்ன அக்கிரமம்!'' என்று அவர் வாய் முணுமுணுத்தது. ''சும்மா இருக்கிற சாமியாருக்கு ஒரு பட்டை'' என்று அங்கே இருந்தது. ''வேலைபுசெய்கிறவர்களுக்குக்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கொடுப்பதுதான் நியாயம், சும்மா இருக்கிற சோம்பேறிகளுக்குக் கொடுப்பது பைத்தியக்காரத் தனம்?'' என்று எண்ணி, அதை ஆத்திரத்தோடு அடித்தார். ''சும்மா இருக்கிற சாமியாருக்குச் சோறு இல்லை' 'என்று சொல்லிவிட்டார்.

புதிய தர்மகர்த்தாவிடம் பழைய வழக்கத்தை வற்புறுத்தும் தைரியம் ஒருவருக்கும் வரவில்லை. ''சாமியார் மிகவும் பெரிய மகான். மௌனமாக இருக்கிறார். அவருக்குப் பிரசாதம் அளிக்கா விட்டால் பாவம்' 'என்று எல்லோரும் கிசுகிசுஎன்று



பேசிக்கொண்டார்கள். ஆனால் ஒருவரும் தர்மகர்த் தாவை அணுகிச் சொல்லவில்லை. கடைசியில்

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld


யாரோ ஒருவர் பெயர் இல்லாமல் மொட்டை சீட்டு ஒன்றில், ''சும்மா இருப்பது என்பது நீங்கள் நினைப்பது போல இழிவான காரியம் அல்ல. நீங்கள் ஒருநாள் சும்மா இருந்து பாருங்கள், அப்போது அதன் அருமை தெரியும்'' என்று எழுதித் தர்மகர்த்தா கையில் கிடைக்கும்படிச் செய்தார்.

அதைப் பார்த்த தர்மகர்த்தாவிற்கு முதலில் கோபம் வந்தாலும், உண்மையாகவே சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற நோக்கம் உடையவர் ஆகையால் கோபத்தை விலக்கி, ஆலோசித்துப் பார்த்தார். 'அப்படியா சங்கதி? சும்மா இருக்கிறது அவ்வளவு பெரிய காரியமா? எங்கே, நான் பார்க்கிறேன்' என்று எண்ணி மறுநாள் சும்மா இருக்கும் விரதத்தை மேற்கொண்டார்.

பேசாமல் வீட்டில் உட்கார்ந்து கொண்டார். யாரோ வராத நண்பர் வந்தார். அவரை அறியாமலே ''வாருங்கள்'' என்று கூற வாய் முந்தியது. அடக்கிக் கொண்டார். எப்படியோ சைகை செய்து பேசாமல் அவரை அனுப்பி விட்டார். அவர் மனைவி எப்போதும் போல் அடிக்கொருமுறை என்ன என்னவோ பேச வந்தாள். அவருக்குக் கோபம் கோபமாக வந்தது. பேசவோ வழி இல்லை, குழந்தைகள் அன்றைக்கென்று அதிக விஷமம் செய்தன. ஒரு குழந்தை அவருடைய விபூதிப் பையை அவிழ்த்து விபூதியை வாரி இறைத்தது. கோபத்தோடு பளார் என்று

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அதன் முதுகில் ஓர் அறை அறைந்தார். அது வீல் என்று கத்திக் கொண்டு ஓடியது. ''ஐயோ பாவம்!'' என்று அவர் மனம் இறங்கியது. குழந்தைக்கு நல்ல வார்த்தை சொல்லிச் சமாதானம் செய்ய வேண்டும் என்ற ஆவல் பொங்கி வந்தது. அவர்தாம் பேசக்கூடாதே!

இப்படி ஒன்றன் மேல் ஒன்றாக அவர் வாயைக் கிண்டச் சந்தர்ப்பங்கள் வந்தன. காலையில் இரண்டு மணி நேரம் பேசாமல் இருப்பதற்குள் அவர் பொறுமையை இழந்தார். கடைசியில் பேசியே விட்டார். தம் வீட்டின் அருகில் நின்ற கழுதையின் மேல் ஒருவன் ஒரு பெரிய கல்லை வீசி எறிந்தான். அந்த வாயில்லாப் பிராணிக்குக் காயம் உண்டாக்கி இரத்தம் ஒழுகியது. தர்மகர்த்தா அதைக் கண்டு கொந்தளித்து. ''அடபாவி!'' என்று வாய்விட்டுச் சொல்லி விட்டார். அவர் மௌன விரதம்குலைந்தது.

அவ்வளவு நேரம் அடக்கி வைத்திருந்த வாக்கை ஒரு கழுதை வந்து வெளிப்படுத்தி விட்டது. அப்பொழுதுதான் அவர் உண்மையை அறிந்தார். தாம் செய்த பிழையை உணர்ந்து, ''சும்மா இருக்கிற சாமியாருக்கு இரண்டு பட்டை சாதம்'' என்று நிறுத்தி எழுதி விட்டு அந்தச் சாமியாரின் காலில் விழுந்தார்.

பேசுவதை விடப் பேசாமல் இருப்பதுதான் மிகவும் சிரமமானது என்பதற்கு இந்தக் கதை உதாரணம்.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

"மோன மென்பது ஞான வரம்பு" என்று ஔவை பாட்டி இதைத்தான் கூறுகிறார்.

## 13. கொடுப்பதில் இன்பம்

பக்தர் ஒருவர், பலரிடம் பொருள் சேட்டி, ஒரு கோவிலைக் கட்டலாம் என்று எண்ணினார். தம்முடைய கருத்தைப் பல செல்வர்களிடம் கூறி, அவர்களால் இயன்றதைக் கொடுக்கும்படிக் கூறினார். அப்படி அவர்கள் கொடுத்ததைச் சேர்த்து வந்தார்.

அந்த ஊரில் ஒரு கஞ்ச மகாப்பிரபு இருந்தார். அவரிடமும் போகலாம் என்று அந்தத் தொண்டர் முடிவு செய்து கொண்டார். ஒருநாள் தம் முடிவின்படி அந்தக் கஞ்சன் வீட்டிற்கும் போனார். அவரைப் பார்த்துக் கஞ்சன், 'எங்கே வந்தாய்?'' என்று கேட்டான். ''நான் பலருடைய நிதி உதவியால் ஒரு கோவில் கட்டலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

அந்தக் கஞ்சன், ''நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டான், ''தங்களிடமும் நிதி உதவி பெறலாம் என்ற எண்ணத்தில் வந்தேன்'' என்று அந்தத் தொண்டர் கூறினார். அறுந்த விரலுக்குச் சுண்ணாம்பு தராத அந்தக்

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கஞ்சன், ''இங்கே என்ன பிள்ளையில்லாச் சொத்தா கொட்டிக் கிடக்கிறது? நான் ஒரு தம்படியும் தர மாட்டேன்'' என்று முகத்திலடித் தாற்போல் சொன்னான்.

தொண்டர் அதை கேட்டுத் திரும்பிப் போக வில்லை. ''ஐயா, ஒரு சமாசாரம், தயவு செய்து பொறுமையாகக் கேளுங்கள் நாளைக்கு ஒரு சபை யைக்கூட்டப் போகிறேன் அதற்கு நீங்களும் வாருங்கள். பணம் கொடுத்தவர்களுடைய பெயர் களை எல்லாம் சொல்லுவேன். நீங்கள் ஓர் ஆயிரம் ரூபாய் கொடுத்தால் அதைச் சபை யோரிடம் காட்டி நீங்கள் தந்ததாகச் சொல்லிப் பாராட்டுவேன்'' என்றார்.

அதற்கு அந்நக் கஞ்சன் இடையில் குறிக்கிட்டு, ''நான் ஆயிரம் ரூபாய் தரப் போவதில்லை உனக்கு வேறு வேலை இல்லையா? இந்த இடத்தை விட்டு உடனே ஓடிப்போ'' என்றான்.

அந்தத் தொண்டர் அவன் காலில் விழுந்து நமஸ்காரம் செய்து ''ஐயா, நான் ஒன்று சொல்கிறேன் பொறுமையாகக் கேளுங்கள். நீங்கள் கொடுக்கும் ஆயிரம் ரூபாயை மறுநாளே உங்களிடம் திருப்பித்தந்து விடுகிறேன். அந்த ஆயிரம் ரூபாயைச் சபையோர்முன் காட்டினால் பலர் நிதியுதவி செய்ய முன் வருவார்கள்'' என்றார்.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

 www.t.me/tamilbooksworld

அந்த லோபி சிறிது யோசித்தான். "நீ திருப்பித் தருவாய் என்பது என்ன நிச்சயம்?'' என்றான். என் தலைமேல் ஆணையாகவும், நான்கட்டும் கோயிலுள்ள சாமியின் மேல் ஆணையாகவும் கூறுகிறேன். நிச்சயமாக உங்கள் பணத்தை திருப்பித் தந்து விடுகிறேன். தாங்களும் தயவு செய்து நாளை நடக்கும் கூட்டத்திற்கு வர வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

அந்தக் கஞ்சன் சிறிது நேரம் தயங்கினாலும் அப்பால் சிறிது தெளிவு பெற்று ஆயிரம் ருபாயைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தான்.

www.t.me/tamilbooksworld



www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

அந்தத் தொண்டர் அதை வாங்கிக் கொண்டு மறுமுறை அவருக்கு நன்றி கூறிவிட்டு, தவறாமல்

www.t.me/tamilbooksworld

கூட்டத்திற்கு வரும்படிக் கூறி விடை பெற்றுக் கொண்டார்.

மறுநாள் கூட்டம் நடந்தது. அந்தத் தொண்டர் பணம் கொடுத்தவர்களின் பெயர்களை எல்லாம் சொன்ன போதும், அந்தக் கஞ்சனின் பெயரும் அதில் வந்தது. அதைக் கேட்டு எல்லோரும் ஆச்சரியம் அடைந்தார்கள். பலரும் தங்களால் இயன்ற நிதி யுதவியைச் செய்தார்கள். கூட்டத்திற்கு லோபியும் வந்திருந்தான்.

அடுத்த நாள், தொண்டர் ஆயிரம் ரூபாயுடன் லோபியின் வீட்டை அடைந்தார். "ஐயா, நீங்கள் பெரிய உபகாரம் செய்தீர்கள். என்னை நம்பிஆயிரம் ரூபாய் கொடுத்தீர்கள். நான் என்னுடைய வார்த்தை தவறாமல் இதைத் திருப்பிக் கொடுக்க வந்திருக்கிறேன்" என்றான்.

லோபி, மறு மொழி ஒன்றும் கூறாமல் உள்ளே சென்று, மற்றொர் ஆயிரம் ரூபாயை எடுத்துக் கொண்டு வந்து தொண்டரிடம் கொடுத்தார். தொண்டருக்கு ஒரே பிரமிப்பாய் இருந்தது. "என்ன இது" என்றார். "நேற்று நீ அந்தக் கூட்டத்தில் நான் பணம் கொடுத்ததைச் சொன்ன பொழுது எல்லோரும் என்னையே பார்த்தார்கள். கூட்டம் முடிந்த பிறகு எல்லோரும் என்னிடம் வந்து என் கைகளைக் குலுக்கிப் பாராட்டினார்கள். அப்பொழுது எனக்கு உண்டான மகிழ்ச்சிக்கு

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld



அளவேயில்லை. என்னுடைய திருமணத்தின் பொழுதுகூட நான் இத்துணை மகிழ்ச்சி அடைந்தது இல்லை. 'கொடுப்பதனால் இன்பம் உண்டாகும்' என்பதை இன்றுதான் தெரிந்து கொண்டேன். அதற்காக மற்றோர் ஆயிரம் ரூபாயைக் கொடுத்தேன்'' என்றான். தொண்டர் அதைப் பெற்றுக் கொண்டு, அவனிடம் விடை பெற்றுச் சென்றார்.

''ஈத்துவக்கும் இன்பம் அறியாகொல் தம் உடைமை
வைத்து இழக்கும் வண்கணவர்'',
(திருக்குறள்)

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## 14. கண்ணன் செய்த தந்திரம்

மகத நாட்டைப் பிருகத்ரதன் என்பவன் ஆண்டு வந்தான். அவன் மிகவும் கொடியவன். அவனுக்குப் பல காலம் மகவு ஒன்றும் இன்றி வாடி ஒருமுனிவனைப் பணிந்துபிள்ளை வரம் கேட்டான். அந்த முனிவன் ஒரு மாம்பழத்தைக் கொடுத்து அதை அவன் மனைவிக்கு அளிக்குபடிக் கூறினான். பிருகத்ரதன் அதனைப் பெற்றுச் சென்று தன் மனைவிமார் இருவரிடமும் அளித்தான். இருவரும் பாதிப்பாதியாக உண்டனர். அதனால் குழந்தையின் பாதியை ஒருத்தியும்,

www.t.me/tamilbooksworld

மற்றொரு பாதியை மற்றொருத்தியும் ஈனவே ''இது ஏதோ உற்பாதம்'' என்று அஞ்சிய மகத வேந்தன் அந்த இரண்டு பாதிகளையும் தன் நகருக்கு வெளியே எறியுமாறு செய்து விட்டான்.

அன்று இரவு மாமிசம் தின்னும் சரை என்னும் அரக்கி ஒருத்தி மதில் வாயிலிலே உலாவிய போது, அந்தப் பிளவுகளைக் கண்டு இரண்டையும் ஒன்றாகப் பொருத்திப் பார்த்தாள். பொருத்தின மாத்திரத்தில் இரண்டும் ஒன்றுபட்டு உயிரோடு குழந்தையாகி விளையாடத் தொடங்கவே, அரக்கி அதனை அரசனிடம் அளித்து, ''சரை என்ற என்னால் பொருத்தப் பட்டமையால் சராசந்தன் என்னும் பெயரிட்டு வழங்குவாயாக'' என்று கூறிச் சென்றாள். அது முதல் அந்தக் குழந்தைக்குச் சராசந்தன் என்று வபயரிட்டு வளர்த்தான்.

அந்தச் சராசந்தன் என்பவனும் கொடியவன் அவன் உலகத்து அரசர் எண்ணாயிரம் பேரைப்பசு வாகக் கொண்டு நரமேதம் செய்ய வேண்டும் என்ற ஆசையினால் கைப்பட்ட அரசர்களை எல்லாம் பற்றிச் சிறை வைத்தான். அதனால் உலகத்தில் உள்ளவர்கள் எவரும் அவன் பேரைச் சொல்லவே அஞ்சுவர்.

ஒரு சமயம் தருமபுத்திரர் இராசசூய யாகம் செய்ய எண்ணிக்கண்ணபிரான் முதலியவர்களோடு ஆலோசனை செய்தார். ''உலகத்திலுள்ள மன்னர் களில் பலரைச் சராசந்தன் சிறைப்படுத்தி இருக்கி



www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

றான். அவனை முதலில் வெல்லவேண்டும். அதற்கு வீமனே ஏற்றவன்'' என்று கண்ணன் கூறினான்.

சராசந்தனைக் கொல்ல எண்ணி, கண்ணன், அர்ச்சுனன், வீமன், ஆகியோர் அந்தணர்களைப் போல் வேடம் பூண்டு சென்றனர். அவ்வாறு அந்தண வேடம் பூண்ட அந்த மூவரும் மகத, நாட்டுக்குள் சரா சந்தனுடைய நகரத்தைஅடைந்தனர். அவர்கள் அரண்மனையை அடைந்து வாயில் காவலரிடம், ''மூன்று அந்தணர்கள் உன்னைப் பார்க்கும் பொருட்டு வந்திருக்கிறார்கள் என்று தெரிவிப்பாயாக'' என்று கண்ணன் கூறினான்.

அரசன், ''அவர்களை அழைத்து வாருங்கள்'' என்று சொல்ல, மூவரும் உள்ளே புகுந்து அவன் இட்ட தவிசில் அமர்ந்து ஆசியும் கூறினார்கள்.

அப்போது மகத மன்னன் அவர்களைக்கூர்ந்து நோக்கி, ''உங்களைப் பார்த்தால் அந்தணர்என்று தோன்றவில்லை. உண்மையைச் சொல்லுங்கள். நீங்கள் யார்?'' என்று கேட்டான்.

''நான் யாதவ குலத்தலைவனாகிய கண்ணன் இந்த இருவரும்தருமபுத்திரனின் தம்பியர்;வீமனும் அர்சுனனும். உன்னுடைய வள நகரைக் காணும் பொருட்டு வந்தோம். அரசர்கள் இதை அணுகுவது அரிதாதலின் மறையவர் உருவத்தைப் புனைந்து புகுந்தோம்'' என்றான் கண்ணன்.

சராசந்தன், ''அப்படியா? என் தோள்கள் பகைவரைப் பெறாமல் தினவு கொண்டிருக்கின்றன.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

 www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

போர் புரிய வாருங்கள்'' என்று ஊக்கத்தோடு கூறி, மேலும் ''எனக்கு ஏற்றவன் வீமன்தான்'' என்று அறை கூவினான். தன் மந்திரிகளை அழைத்துத் தன் மகனுக்கு முடி சூட்டி விட்டு வீமனுடன் மல்யுத்தம் புரியத் தொடங்கினான்.



அந்த இருவரும் சிங்கமும் சிங்கமும் பொருதாற் போலத் தாக்கினர்; காலாலும் கையாலும், தோளாலும் தலையாலும் முட்டி மற்போர் செய்தனர். இவ்வாறு பதினைந்து தினங்கள் பகலும் இரவும் விடாமல் யுத்தம் செய்தார்கள். பூதலம் நடுங்க, திசை எல்லாம் நடுங்க இருவரும் போர் செய்தனர். பிறகு வீமன் சராசந்தனைக் கிழித்து வெற்றியாரவாரம் செய்து நின்றான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld


இரண்டாகப் பிளந்து வீசிய சராசந்தனுடைய உடல் மீளவும்பொருத்தி ஒன்றாகியது. சராசந்தன் உடனே எழுந்து தோள் கொட்டி ஆர்த்தான். வீமன் அதுகண்டு வியந்து, மறுபடியும் போர் செய்யத் தொடங்கினான். முன்னிலும் ஏழு மடங்கு பலம் கொண்டு அவனை உதைத்துத் துகைத்தான். சராசந்தன் உடல் மீண்டும் இரண்டு பிளவாகியது.

அந்த இரண்டு பிளவுகளும் மறுபடியும்ஒன்று படும் எனத் தோன்றியது. வீமனும் அர்ச்சுனனும் உண்மையை அறியாதவர்கள், கண்ணனோ அதைச் சேராதவாறு எண்ணி, அருகிலே கிடந்த ஒரு துரும்பை எடுத்து அதை இரண்டாகக்கிழித்து, பிளவுகள் இரண்டையும் தலை மாற்றிக் கீழே போட்டான்.

www.t.me/tamilbooksworld

குறிப்புணரும் அறிவுமிக்க வீமன் அதை உணர்ந்து கொண்டு, சராசந்தனுடைய உடலின் பிளவுகளைத் தலையும் காலும் மாறிக் கிடக்கும் படியாக விடைவிலேயே மாற்றிப் போட்டான். சராசந்தன் மீள வழியில்லாமல் இறந்தான்.

பேசாத பேச்சினால் வீமனுக்கு வெற்றியை வழங்கிய மாய கோபாலனை யாவரும் புகழ்ந்தார்கள்,

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# 15. பொரி அரிசியின் கதை

ஓர் ஊரில் ஒரு பொரி அரிசி கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப் பட்டதாம். உருண்டு திரண்டு குண்டாகவும் வெளுப்பாகவும் இருக்கும் தனக்கு அழகான புருஷன் வேண்டும் என்று எண்ணியது. அந்த ஊரை விட்டுப் புறப்பட்டது. அதற்குத் தாயும் இல்லை; தகப்பனும் இல்லை.

சின்னச் சின்னக் கையும் காலும் அசைய, அது ஊரைச் சுற்றப் புறப்பட்டது. யாரோ ராஜா சண்டையில் வெற்றி அடைந்து ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். அவனுடன் யானை, குதிரை ஒட்டகம் முதலிய படைகளும் வந்தன. பொரி அரிசி வந்து கொண்டிருந்தபோது எதிரே அரசனுடைய யானை ஒன்று வந்தது. பொரி அரிசி விசுக் விசுக் கென்று வந்ததை அந்த யானை பார்த்தது. அதற்கு மிகவும் வேடிக்கையாக இருந்தது.

''ஏ பொரி அரிசி, பொரி அரிசி! எங்கே இவ்வளவு உற்சாகமாகப் புறப்பட்டாய்?'' என்று அதைப் பார்த்து யானை கேட்டது.

உடனே பொரி அரிசி, ''நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன், அதற்காக மாப்பிள்ளை தேடிக் கொண்டிருக்கிறேன்'' என்று சொல்லியது.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அப்படியானால் என்னைக் கல்யாணம் செய்து கொள்ளேன்'' என்று யானை கேட்டது

பொரி அரிசி நிமிர்ந்து யானையை மேலும் கீழும் பார்த்தது யானை மகிழ்ச்சியால் தன் காதுகளை அசைத்தது. அந்தக் காதுகள் முறத்தைப் போல இருந்தன. ''ஐயையோ! இதைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் இந்த முறம் இரண்டும் நம்மைப் புடைத்துத் தள்ளி விடுமே!'' என்று பொரி அரிசிக்குப் பயம் உண்டாகியது.

''ஊஹூம். நான் மாட்டேன். உனக்கு காது நன்றாகயில்லை. மடங்கி இருக்கிறது'' என்று சொல்லி வேகமாகப் போகத் தொடங்கியது.

பொரி அரிசி வேகமாகப் போய்க் கொண்டிருந்தது! எதிரே ஒரு குதிரை வந்தது. ''என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளேன் என்னுடைய கம்பீரமான நடை யாரிடம் இருக்கிறது?'' என்று சொல்லிக் கொண்டே நான்கு முறை டக் டக் என்று குதிரை குறுக்கும் நெடுக்கும் நடந்து காட்டியது.

அது நடக்கும் பொழுது பொரி அரிசிக்கு உலக்கையின் ஞாபகம் வந்து விட்டது ''ஐயோ! இதன் காலுக்கு அடியில் நாம் அகப்பட்டுக் கொண்டால் நம்மைப் பொடியாக்கி விடுமே!' என்று பயப்பட்டது.

''ஊஹூம். நீ அசிங்கமான பிராணி. குந்தம் தள்ளி'' என்று சொல்லிவிட்டு ஒரே ஓட்டமாக ஓடிப் போய்விட்டது.

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கொஞ்ச தூரம் போன பிறகு எதிரே ஒட்டகம் ஒன்று தன் தலையை அசைத்து ஆட்டிக் கொண்டே வந்தது. ஒட்டகம் "நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்கிறேன்! நீ என் முதுகில் ஒய்யாரமாக ஊர்வலம்" வரலாம் என்று ஒட்டகம் சொல்லித் தன் உதட்டை அசைத்தது.

உடம்பெல்லாம் கோணல் மயமாக இருந்த ஒட்டகத்தைப் பொரி அரிசி ஒரு தடவை நிமிர்ந்து பார்த்து "ஐயா! எத்தனை கோணல்! உன்னையும் ஒரு பெண் கல்யாணம் பண்ணிக் கொள்வாளோ!" என்று சொல்லி வேகமாக ஓடிப் போய் விட்டது.

கொஞ்ச தூரம் போனபிறகு எதிரே ஒரு கழுதை வந்தது. பொரி அரிசியைப் பார்த்து "என்னைப் பார். என் வெள்ளி மூக்கைப் பார். உன் அழகுக்கும் என் அழகுக்கும் பொருத்தமாக இருக்கும். என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளேன்" என்று சொல்லி கொண்ணாரம் போட்டுக்குதித்தது. சந்தோஷத்தால் விலுக்கென்று பின்னங் காலால் உதைத்துத் தள்ளியது.

அதைப் பார்த்த பொரி அரிசி, "ஐயோ! நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன். நீ காலை உதறி உதைக்கிறாய்" என்று சொல்லி விட்டு மேலே நடந்து போயிற்று.

அப்போது அங்கே அழகான கொண்டை பளபளக்க வாலும் சிறகும் மினுமினுக்க ஒரு சேவற் கோழி ஒய்யார நடை போட்டு எதிரே வந்து கொண்டிருந்தது. ஆஹா! என்ன அழகு! என்ன

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld


அழகு!'' என்று பார்த்து ஆசை கொண்டது பொரி அரிசி.

அந்தக் கோழி பொரி அரிசியைப் பார்த்து, ''பொரி அரிசிக்குட்டி, நீ புறப்பட்டது எங்கே?'' என்று கேட்டது. பொரி அரிசிக்கு வெட்கம் வந்து விட்டது. ''கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்'' என்றது.

''மாப்பிள்ளை எங்கே?'' என்று சேவல் கேட்டது. ''நீர்தாம்'' என்று சொல்லி ஒரு நமஸ்காரம் பண்ணிற்று பொரி அரிசி. ''எதிரே வா'' என்றது கோழி.

பொரி அரிசிக்குச் சந்தோஷம் தாங்க முடிய வில்லை. நாணிக்கோணி நடை போட்டுக்கொண்டு கோழிக்கு முன்னாலே வந்து நின்றது.

கோழி கொஞ்ச நேரம் சும்மா இருந்துவிட்டு லபக்கென்று அந்தப் பொரி அரிசியைக் கொத்தி விழுங்கி விட்டது. பொரி அரிசி அதன் தொண்டைக் குள்ளே போகும்போது, ''கடைசியில் இப்படியா முடிந்தது நம் கதி!'' என்று வருத்தப்பட்டு அழுதது.

எவர் உருவத்தைப் பார்த்தும் நகைக்கலாகாது என்பதைப் புரிந்து கொண்ட பொரி அரிசி, கோழியின் வயிற்றுக்குள் போய்விட்டது.

---

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld